www.padippakam.com


# தெளிதமிழ்

இலக்கிய இலக்கணத் திங்களிதழ்

விலை உரு 5.00






தோள்கள் உடையவர்கள் ஒன்றுபடுங்கள்-புதுத்
தோற்றம் விழைபவர்கள் ஒன்றுபடுங்கள் -அறிஞர் சாலை இளந்திரையனார்


| ஆசிரியர் புலவர் மு. இறைவிழியன் | ஆண்டு-ச திங்கள்-க | தி.ஆ.உ0௩௫ கும்பம் (மார்கழி) (04-02-2004) |
| --- | --- | --- |


## மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர்



## மொழிவாழிடம் மக்கள் வாயே!

தமிழ் - வாழ்வது தமிழர் வாயினிலே
அவர் - வழங்கா விடின்அது மாய்ந்துவிடும்
எந்த - வாழ்மொழியும் மக்கள் வாயொலியே!
தனி - வடிவ மன்றுபெரு வாய்மையிதே.

மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்
இசைத்தமிழ்க் கலம்பகம் (ப.63)

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு.
-பாரதியார்

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள தமிழர் ஒன்றாதல் கண்டே!
-பாவேந்தர்

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் நாளேடுகளும் தொலைக்காட்சிகளும்

ஒரு திருமண நிகழ்வின் போது ஏற்பட்ட தீ நேர்ச்சியால் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் உயிரிழக்கவும் நூற்றுக்கு மேற்பட்டோர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்படவும் ஆன நிலை ஏற்பட்டது. அது கேட்போரையும் செய்தியைப் படிப்போரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தும் அளவிற்கு அமைந்துள்ளது. ஆனால் ஒரு நாளேடு படங்களை வெளியிட்டுக் **'கருமாதியான கல்யாணம்'** என்ற தலைப்பில் குறிப்பிட்டிருந்தது வியப்பாக இருந்தது. இஃது என்ன இதழறமோ! இப்பொழுது நாளேடுகள் கையாளும் 'அறம்' மிகச்சிறப்பாக உள்ளது. மக்கட்கு உண்மையான செய்திகளைத் தந்து அவர்களை நல்வழிப்படுத்தும் கடமை அவற்றிற்கு உண்டு. அவ்வாறு அவை செயல்படுகின்றனவா?

திருமண மண்டபத்தில் தீ எவ்வாறு பிடித்தது?

நாளேடுகளில் வந்த செய்திகள் :

1. யாகத்தீ மேலெழுந்து பந்தலைப் பற்றியது.

2. மணமேடையின் அலங்காரத் துணிகள் படப்பிடிப்பின் போது வெப்ப மிகுதியால் தீப்பிடித்துப் பரவியது.

3. மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையில் பிடித்த திரை படப்பிடிப்பின் போது வெப்ப மிகுதியால் தீப்பிடித்துப் பரவியது.

மேலும் செய்திகள் தொடர்ந்து வரலாம்.

உண்மையான காரணம் வெளிவருமா? அரிது! ஏனெனில் பணச்செல்வாக்கு அரசியல் செல்வாக்கு, மதச்செல்வாக்கு உள்ளே புகும். எனவே ஏமாறிய யார் மீதாவது பழியைப் போட்டு வழக்கை முடித்து விடுவர். இது தான் இந்த நாட்டில் இப்பொழுது நடைமுறையில் உள்ள நெறி.

நாட்டில் உள்ளார்க்கெல்லாம் 'நல்ல நேரம்' குறித்துத் தந்த அந்தக் குடும்பம் தன் மக்கள் வாழ்விற்கு ஒரு நல்ல நேரத்தைக் குறிக்க முடிந்ததா? அப்படி ஒரு 'நேரம்' இருந்தால் தானே குறிக்க முடியும். நேரம் நல்லதாவதும் தீயதாவதும் ஏற்படும் நிகழ்வுகளைக் கொண்டு மக்களால் குறிக்கப்படுவதே யாகும். இயற்கையாக அமைந்த காலத்தில் எந்தக் காலமும் தீமையானதன்று. அறிவுடையார் பொழுதின் மீது பழி கூறார்.

இந்த உண்மையை மக்கள் உணர்ந்து விடாமல் மதம் என்னும் மயக்கத்தைக் கொண்டு காலத்தால், நிறத்தால், பூவால், எழுத்தால், இட மாற்றத்தால் வாழ்வில் செல்வாக்கு ஏற்படும் எனத்தவறான வழியைக் காட்டுவதால் அவர்கள் அறியாமை மிகுந்தவர்களாக மாறி உள்ளனர். உயர்வு தரும் உழைப்பை அணுவளவும் மதித்திலர். அதிர்ஷ்டத்தில் 'நம்பிக்கை கொண்டுள்ளனர்'. உழைக்காமல் குறுக்கு வழியில் 'கோடீசுவரராகும்' வழியை நாடுகின்றனர். இந்தத் தீய மடமை நிறைந்த வழிகளையெல்லாம் நாளேடுகள் தம் கடமை மறந்து பக்கம் பக்கமாகச் **'சோதிடங்களை'** வெளியிட்டும், தொலைக்காட்சிகள் **அதிர்ஷ்டக்கல்லையும் வாஸ்துவையும்** நாள்தோறும் விளக்கிக் காட்டியும் மக்களை மாக்களாக்குகின்றன. மக்கள் நெறிபிறழ்ந்து, உழைப்பின் சிறப்பை உணராமல் வேண்டாத மூடச் சடங்குகளையும் பேரிடர் தரும் ஆடம்பரங்களையும் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். அதன் விளைவே மேற்கண்ட துயர் மிகுந்த தீ நேர்ச்சி. மக்கள் மேற்கண்ட தீமைகளிலிருந்து விடுபட வேண்டுமெனில் **நாளேடுகளே, தொலைக் காட்சிகளே,** உமக்குள்ள பொறுப்புணர்ந்து அவர்கட்குப் பகுத்துணர்ந்து நடக்கும் வழியைக் காட்ட முனைந்திடுக.

www.padippakam.com



# நான்மணிக் கடிகை - திறனாய்வு

புலவர்கோ தி.நா. அறிவு ஒளி, க.மு., கல்.மு., (தொடர்ச்சி)

21. மொய் சிதைக்கும் ஒற்றுமை இன்மை. 22. குலஞ்சிதைக்கும் கூடார் கண் கூடிவிடின். 23. இருள் தீர்ந்த கண்ணராச் (கண்ணொளியுடையவராய்) செய்வது கற்பு. 24. அலைப்பினும் அன்னேயென்றோடுங் குழவி. 25. ஊர்நலம் உள்ளானால் (நாடாளும் தலைவன்) உள்ளப்படும். 26. நகை நலம் நட்டார்கண் நந்தும் (சிறக்கும்) 27. அஞ்சாமை அஞ்சுதி (அஞ்சுவது அஞ்சாமை என்னும் குறட் கருத்தோடு ஒப்பிட்டு எண்ணுக.) 28. கோல்நோக்கி வாழுங் குடியெல்லாம் (குடிமக்கள் செங்கோலாட்சியை நோக்கி வாழும்) 29. தாய் முலைப்பால் நோக்கி வாழுங் குழவிகள். 30. வானத்துளி நோக்கி வாழும் உலகம். 31. கற்பக் கழிமடம் அஃகும். 32. தனக்கொன்று உறுவழி நிற்பது அறிவு. 33. திருவின் திறனுடைய தில்லை. 34. ஒருவற்குக் கற்றலின் வாய்த்த பிறவில்லை. 35. சிறந்த நகை வித்தாகத் தோன்றும் உவகை. 36. பிணியன்னர் பின் நோக்காப் பெண்டிர். 37. உலகிற்கு அணியன்னார் அன்புடை மக்கள். 38. அந்தணரின் (அறவோர்) நல்ல பிறப்பில்லை. 39. தாயின் சிறந்த தமரில்லை. 40. எண்ணின் இளமையோடு ஒப்பதில். 41. பெரிய பெரியரான் எய்தப்படும். 42. அரிய அரியவற்றாற் கொள்ப. 43. நட்டார் வழங்கத் தளிர்க்குமாம்மேல். 44. வகையுடைப் பெண் இனிது பேணி வழிபடின். 45. பண் இனிது பாடல் உணர்வார் அகத்து. 46. கண்டதே செய்பவாங் கம்மியர். 47. வேட்ட இனியவே செய்ப அமைந்தார். 48. முனியாதார் முன்னிய செய்யும் திரு. 49. ஆற்ற மறைக்க மறையாதாங் காமம். 50. கீழ் வீழ்ந்த வேரின்றி வாடும் மரமெல்லாம்.

51. ஏதிலார் என்பார் இயல்பு இல்லார். 52. மேதக்க தந்தை யெனப் படுவான் தன் உவாத்தி (ஆசிரியர்) 53. தாய் என்பாள் முந்து தான் செய்த வினை. 54. பொறிகெடும் நாண் அற்ற போழ்தே. (செல்வம்) 55. தூக்கின் அகம் பொதிந்த தீமை மனம் உரைக்கும். 56. முன்னம் முகம் போல முன் உரைப்பது இல். 57. நன்றி சாம் நன்றறி யாதார் முன்னர். 58. உள்ளற் பொருளது உறுதிச் சொல். 59. கொண்டானின் துன்னிய கேளிர் பிறர் இல்லை. 60. அரும் புணர்ப்பின் பாடல் சாம் பண்ணறியாதார் முன்னர். 61. அரசனும் (அரசும்) இல்வாழ்வார் இல்வழி இல். 62. மக்களின் ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை. 63. ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல். 64. இனிதுண்பான் என்பான் உயிர் கொல்லாதுண்பான். 65. தனியன் எனப் படுவான் செய்த நன்று இல்லான். 66. தீதில் வினையினான் நந்துவர் (உயர்வடைவர்) மக்களும். 67. பிறந்தார்க்கு அரிய துணை துறந்து வாழ்தல். 68. ஈத்துண்பான் என்பான் இசை நடுவான். 69. பழியின்மை மக்களால் காண்க. 70. உள் அறிந்து சேர்தற் பொருளது அறநெறி. 71. பன்னூலுந் தேர்தற் பொருள பொருள். 72. ஏலாதான் பார்ப்பான் (பார்ப்பான் என்பதற்கு இலக்கணம் கூறுகிறது 55 ஆம் பாடல். எவர்பகையையும் ஏற்றுக் கொள்ளலின்றி யாவரையும் தன் வயப்படுத்தி ஒற்றுமையுடன் வாழ்பவன் பார்ப்பான் ஆவான். 73. துறப்பார் துறக்கத்தவர். 74. பெண்ணின் உருவின்றி மாண்டவுளவாம் (பெண்களுக்கு அழகு

www.padippakam.com



இல்லையாயினும் மாட்சிமையுள்ள நற்பண்பு இயல்புகள் உள்ளனவாகும். ஆகவே உருவு - அழகு - கண்டு எள்ளல் ஆகாது.) 75. பாட்டுள்ளும் பாடெய்தும் பாடல் உள. (எல்லாம் பாட்டு எனப்படினும், பாடல்கள் பலவற்றினுள்ளும் பெருமை மிக்க பாடல்களும் உளவாம்) 76. தவாவாம் (கெடாதாம்) அவா இலார் செய்யும் வினை. 77. செய்தாரின் நல்லர் சிதையாதவர். 78. ஒருவன் முகன் உரைக்கும் உள்நின்ற வேட்கை. 79. பதி நன்று பல்லார் உறையின், ஒருவன் மதி நன்று மாசறக் கற்பின். 80. ஊழியும் யாண்டு எண்ணி யாத்தன யாமமும் நாழிகை யானே நடந்தன (யாமம், கிழமை, யாண்டு, ஊழி, என்னும் காலப்பகுப்புக்குறியீடு இருந்தமை நோக்கற் குரியதாம்.)

(தொடரும்)

## மணமக்கள் வாழ்க!



❖ தி.ஆ. 2034 சிலை 21 ஆம் நாள் (5-1-2004) புதுச்சேரி ஆனந்தா திருமண நிலையத்தில், சென்னை திரு. **வி. குமாரசாமி - சபிதா** இணையரின் மகன் செல்வன் **பக்தசுந்தர்** புதுவைத் திரு **முனிசாமி** இணையரின் மகள் செல்வி **பாரதி** ஆகிய இருவருக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது.

❖ தி.ஆ. 2035 சுறவம் 9ஆம் நாள் (23-1-2004) புதுவை, சாயிபாபா திருமண நிலையத்தில், கதிர்காமம் பொறிஞர் **ந.மு. தமிழ்மணியாரின்** அண்ணன் திரு **வேங்கடாசலம்** அவர்களின் மகன் செல்வன் **முரளிதரன்** - செல்வி **சண்முகப்பிரியா** ஆகிய இருவருக்கும் பேராசிரியர் **ம.இலெ. தங்கப்பா**, மாநில முதல்வர் **ந. அரங்கசாமி**, சென்னை மருத்துவர் **செ.நெ. தெய்வநாயகம்**, தஞ்சை **பெ. மணியரசன்** ஆகிய சான்றோரின் வாழ்த்துரையுடன் திருமணம் சிறப்பாக நடந்தது.

❖ தி.ஆ. 2035 சுறவம் 12ஆம் நாள் (26-1-2004) புதுவை, செயராமன் திருமணநிலையத்தில் திரு **வை. மோகன்ராசு - சாந்தி** இணையரின் மகன் செல்வன் **கார்த்திகேயன்**, புதுவை, திரு **த. விட்டுணுகசேந்திரன் - இராசலட்சுமி** இணையரின் மகள் செல்வி **விமலா** ஆகிய இருவருக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

❖ தி.ஆ. உ0௩௫ சுறவம் கஉ ஆம் நாள் (26-1-2004) சிவகங்கை சிவமகாலில், சென்னை முனைவர் **பா. இறையரசன்** அவர்களின் மகன் செல்வன் **அறிவுடைச்செந்தில்**, சிவகங்கை திரு. **அ. சுப்பிரமணியன்** அவர்களின் மகள் செல்வி **கல்பனாதேவி** ஆகிய இருவருக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் எல்லா நலமும், வளமும் பெற்று வாழ மகிழ்வுடன் "**நற்றமிழ்**" வாழ்த்துகிறது.

- **ஆசிரியர்**

www.padippakam.com



# வேதத்தில் தமிழ் - ஆய்வாளர் சுந்தரராசு

முனைவர் ப. மருதநாயகம் (தொடர்ச்சி)
இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.

'அசுவினி' எனும் பெயர் இந்தோ - ஐரோப்பிய மொழி வல்லுநர்கட்குப் புரியாத புதிராகும். இதனைக் குதிரையெனும் பொருள்படும் அசுவம் என்ற சொல்லோடு தொடர்புபடுத்திப் பல பொருந்தாத விளக்கங்களைத் தந்துள்ளனர். இக்கடவுளர்களின் தேர்கள் பறவைகளால், குறிப்பாக, கருடன் என்றழைக்கப்படும் கழுகுகளால் இழுக்கப்படுவதாக இருக்கு வேதம் கூறும். 'ஆழ்' எனும் தமிழ்ச் சொல் நீரில் மூழ்கு, குதி என்ற பொருளைத் தரும் (DED 338). அசுவினிகள் நீரில் மூழ்கியவர்களைக் காப்பாற்றும் தெய்வங்களாகப் பல தொன்மங்களில் புகழப்படுகிறார்கள். யாகத்தில் அளிக்கப்படும் உணவை உட்கொள்ள அசுவினிகள் காலையில் வருவார்கள் என்றும் வேதம் கூறுகிறது. பறவைகளுக்குணவிடுவது 'புண்ணிய'மென்று கருதுவதும் கருடனைப் புனிதப் பறவையாகத் தொழுவதும் இன்றும் தமிழகத்தில் உள. 'கிருத்திகா' எனும் பெயர் 'கார்த்திகேயன்' எனும் தமிழ்ச்சொல்லின் மறுவடிவமே. கார்+தீ+கேயா (சேயா) என்று பிரிக்கப்பட்டு, கருப்பு, தீ, குழந்தை ஆகியவற்றைக் குறிக்கும், கார்த்திகை விண்மீன் குழு (Pleaides) அக்கினிக்குரியதாகும். கார்த்திகேயனைக் குழந்தையாகப் பாராட்டும் மரபு இங்கு நீண்ட நெடுங்காலமாக உள்ளது. அக்கினியைக் குழந்தையாக அவன் தாய் சீராட்டுவதாக இருக்கு வேதம் கூறுகிறது.

மேலை நாட்டார் நிகழ்த்தியுள்ள தொல்பொருள் ஆய்வு முடிவுகள் சிலவற்றையும் நாம் இங்கு எண்ணிப்பார்த்தல் நலம். அவர்கள் சுமேரிய நாகரிகம் கி.மு. 2000க்கு முற்பட்டதென்பர். சுமேரியத் தொன்மங்கள் இருக்கு வேதத்தொன்மங்களை ஒத்தவை. அவைகளின் வானியல் குறியீடுகளிலும் வியத்தகு ஒற்றுமைகள் உள்ளன. இந்துச்சமவெளி அகழ்வாய்வுகள் அந்நிலத்தில் வாழ்ந்தவர்களும் இத்தகைய நம்பிக்கைகளையே கொண்டிருந்தார்கள் என்பதைத் தெளிவு படுத்தும். பழம் சுமேரியக் கோயில்கள் அமைப்பில் தமிழகத்துக் கோயில்களைப் பெரிதும் ஒத்திருத்தலை அறிஞர்கள் கட்டிக் காட்டியுள்ளனர். இந்துச் சமவெளியார் அவர் காலத்துச் சுமேரியருடன் வணிக, பண்பாட்டு உறவு கொண்டிருந்தனர் என்பது வரலாற்று உண்மை. எனவே பல பேரறிஞர்களும் ஆய்வாளர்களும் கருதுவதுபோல், சுமேரிய நாகரிகமும் இந்துச்சமவெளி நாகரிகமும் திராவிடப் பண்பாட்டை அடியொற்றி வளர்ந்தவை எனும் தப்பமுடியாத முடிவுக்கு நாம் வரவேண்டி யுள்ளதென்பார் சுந்தரராசு.

www.padippakam.com



வேத, உபநிடதங்களையும், பாணினியம் போன்ற வடமொழி இலக்கண நூல்களையும் தொல்காப்பிய எழுத்து, சொல் அதிகாரங்களையும் சங்க இலக்கியங்களையும் வேதங்களின் மொழி பெயர்ப்புகளையும் அவைகளுக்கு மேலை நாட்டாரும் நம்மவரும் ஆங்கிலத்திலும் ஏனைய மொழிகளிலும் அளித்துள்ள விளக்கங்களையும் இந்துச்சமவெளி நாகரிகம், சுமேரிய நாகரிகம் போன்றவை பற்றிய தொல்பொருள் ஆய்வாளர்கள், அகழ்வாய் வாளர்கள் கூறியுள்ள கருத்துக்களையும் ஆய்ந்து பரோ (Burrow) தொகுத்துள்ள திராவிட மொழிகளின் வேர்ச்சொல்லகராதி போன்ற துணை நூல்களின் ஆதாரங்களோடு மொழியியல் அணுகுமுறை, தொன்மவியல் அணுகுமுறை, சமூகவியல் அணுகுமுறை ஆகியவற்றைப் பயன்படுத்தி அறிஞர் சுந்தரராசு தமிழ், வடமொழி உறவு பற்றி எடுத்திருக்கும் முடிவுகள் உலகறிய உணர்த்தப் பெற வேண்டியவை. □

## தமிழ்த் திரைப் படங்களுக்குத் தமிழில் பெயரிடுக
## 'தமிழ்ப்பாதுகாப்பு இயக்கம்'
## தொடங்குகிறார் தொல். திருமாவளவன்

தமிழ்த் திரைப்படங்களுக்குத் தமிழில் பெயர் வைக்க வேண்டும், என்பதை வலியுறுத்திக் களமிறங்கியுள்ள **திருமாவளவன்,** இந்தப் போராட்டத்தை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பெயரில் நடத்துவதை விடப் பொதுவான ஓர் அமைப்பின் பெயரில் நடத்த வேண்டும் என்ற முடிவுடன் தனது தலைமையில் **தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம்** என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளார். 'தமிழ் முழக்கம்' இதழின் **'சோழ நம்பியார்'** இந்த அமைப்புக்கு ஒருங்கிணைப்பாளராக உள்ளார்.

பொங்கலுக்கும் அதன் பிறகும் வெளியாகவுள்ள படங்களுக்குத் தமிழில் பெயர் சூட்ட வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட படங்களின் தயாரிப்பாளர்கள், இயக்குநர்களுக்குத் **தமிழ்ப்பாதுகாப்பு இயக்கம்** மடல் அனுப்பியுள்ளது. இதனை மீறி வேற்று மொழியில் தலைப்பு வைக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட படங்கள் ஓடும் திரையரங்குகளுக்கு முன் மறியல் செய்து கைதாகத் தயாராகி வருகிறது 'தமிழ்ப்பாதுகாப்பு இயக்கம்'.

**நன்றி. நக்கீரன் - 6-1-04**

www.padippakam.com



# **** பாசம் ****

சொல் மூலம் : பய் > பாய் > பாய்+அம் > பாயம் > பாசம்

சொற்பொருள்கள் : க. அன்பு உ. பற்று ௩. தளை
ச. கயிறு ரு. தையல் சா. சுற்றம்.

பய் : பசுமைக் கருத்து மூலவேர்.

பசுமைக் கருத்தின் கிளை வளர்ச்சியாக, ஒட்டுதல் கருத்து நிரம்பி, அதனின்றும் பலபடியான சொல்லாக்கங்கள் செழிப்பெய்தின. பசுமையும் ஈர்மையும் (ஈரத்தன்மையும்) உடைய ஒன்றே, ஒட்டுறவுக்கு இயல்வதாகையும், வறட்சியும் உலர்ச்சியும் உடைய ஒன்று, இயைவுக்கு இயலாததாகையும் ஈண்டுக் கருத்தில் கொள்ள வேண்டிய உண்மைகளாகும்.

பய் > பயின் = பசை, அரக்கு, பிசின் (அகம் : 256:9-10)
(சீவக : 235)
(சூடா : 6 : 21 : 4)

பய்+இர் > பயிர்+பு > பயிர்ப்பு = பசை, பிசின், அழுந்த ஒட்டும் பசை (கலி : 50:12)
(அகம் : நித்தி. 308.4)

பயிர்ப்பு = பிற ஆடவர் மேனி, தன்மேற்படுங்கால், பெண்டிர்க்கு இயல்பாகவே மனத்துள் தோன்றும் அருவருப்புணர்வு; அருவருப்பு (திவா.)

மகடூஉக் குணம் நான்கனுள் ஒன்று.

பய் > பயி > பசி = உணவின்மையால் வயிறு ஒட்டும் நிலை; அதனைத் தீர்க்க வேட்கையுறும் உணர்ச்சி.

"பசியட நிற்றல்............" (தொல் : 6 : 22 : 3) 'பயி' என்னும் பழந்தமிழ் வடிவம், மலையாளத்தில் பசிய வடிவங்களில் பரக்கக் கிடக்கின்றது.

பய் + இல் > பயில் = ஒட்டு, நெருங்கு (பெரும்பாண் : 395)

பயில் + தல் > பயிறல் = நெருங்குதல், ஒன்றுதல்,
ஒன்றிப் பழகுகை (தொல். பொருள் 3 : 11 : 1)

பயில் + சி > பயிற்சி = பழகிப் பெறும் கல்வி, பழக்கத் தொடர்ச்சி

பய் > பயை > பசை = ஒட்டுதற்குரிய பொருள், கஞ்சி, கூழ்ப் பொருள்.

www.padippakam.com



(ஒ.நோ : நய் > நயை > நசை - இய் > இயை > இசை)
(மலைபடு : 26)
(குறுந் : 330 : 1)

பசை = ஒட்டு, ஒட்டிக் கொள், பற்றிக்கொள், (அகம் : 379 : 21)

பசை = விழைவு (குறுந் : 87 : 4)

பசை+தல் > பசைதல் = விரும்புதல் (நாலடி : 60 : 3-4)

பசைதல் = நட்புக் கொண்டிருத்தல் (நாலடி : 187 : 1-2)

பசை = அன்பு நெகிழ்வு (குறள் : 1098)

பய் > பாய் > பாய் > அம் > பாயம் = விருப்பம், விழைவு, அன்பு, புணர்ச்சிவிருப்பம். (குறிஞ்சிப் : 57-58)
(பெரும்பாண் : 341-342)

பாயம் > பாசம் = அன்பு, வேட்கை, உறவன்பு

(ஒ. நோ : தேயம் > தேசம் நேயம் > நேசம்
ஈயல் > ஈசல் நெயவு > நெசவு)

பாசம் = அன்பு (சீவக : 1320)
பாசம் = பற்று (நாலடி : 130)
பாசம் = பற்றிமை (திருவாச : 7:2)
பாசம் = சுற்றம் (திரிகடு : 20)

அன்பையும், விழைவையும் வேட்கையையும் குறித்தவாறு வளர்ந்து பயிலப் பெற்றதாகிய "பாசம்" என்னும் சொல் தமிழ்மொழியில் மட்டுமே தோன்றிய ஒன்றாகும். தொடர்ந்த பரவலான வழக்காற்றிலும் உள்ளதாகும்.

இம்மேற்கண்ட பொருள்களையுடைய "பாசம்" என்னும் தூய செந்தமிழ்ச்சொல் **சமற்கிருதத்தில் அறவேயில்லை.** தமிழ்மொழிப் புலவர்கட்கும், பொதுமக்கட்கும் உற்ற வடமொழி மயக்கம், அச்சொல்லை வடமொழியென்றே பிழைத்தெண்ணிப் பயின்று வருமாறு நேர்வித்துள்ளது.

"பய்" என்னும் ஒட்டுதல், ஒன்றுதல் கருத்து மூல வழியாகப் பிணித்தல் கருத்தும், கட்டுகைக் கருத்தும் விளர்ந்தன. "பாசம்" என்பது, ஒன்றைப் பற்றி பிணிப்பதாகிய கயிற்றுக்கும் ஆகி வந்தது.

பாசம் = கயிறு (நற் : 12 : 1-2)
பாசத்தளை = பற்றிப் பிணிக்கும் தளைக்கயிறு (திரிகடு:22:1-2)
பாசம் = பாசக்கயிறு (சிலம்பு : 5 : 132)
(சிலம்பு : 15 : 79)
(மணி : 22 : 71)

www.padippakam.com



பிணிக்கும் கயிற்றைக் குறித்த "பாசம்" என்னும் சொல், சமற்கிருதத்தில் "Pasa" எனத் திரிந்த்து. "பாசம்" என்ற செப்பவடிவம் அம்மொழிக்கண் இல்லை.

சமற்கிருத அகராதிகளில், "Pāsa" என்ற சொல்லுக்கு, வலை, கண்ணி, சுருக்கு, கயிறு, தொடரி, அதனைக் கட்டுவிப்பது என்றவாறான பொருள்களைப் பரக்கப் பட்டியலிட்டுள்ளனர். அச்சொல்லுக்கு நேரே - அன்பு, விழைவு, விருப்பம், அன்புறவு என்றவாறு, தமிழ்ச் சொல்லாகிய பாசத்துக்குரிய ஒருபுடைப் பரவலான செழும்பொருள்களில் ஒன்று தானும் குறிக்கப்பெறவேயில்லை.

பிணித்துத் தளைக்கும் கயிறாகிய "பாசம்" என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபுகளை, அதன்வழி வடபாலியர் வளர்த்துக் கொண்டகிளைக் கருத்துக்களுடன், **ஆய்வறிஞர் அருளியாரின்** மொழியியல் உரைகள் நூலின் இரண்டாம் தொகுதி பக்கம் 145 முதல் 152 வரை நிரக்கக் காணலாம்! -தொகுப்பாளர் : திரு சா. செழியன்.

## முனைவர் குருசாமி சித்தரின் பாராட்டு

தமிழியம், தமிழ் இலக்கணம், தமிழ்ப்பாடம், பாடற் பயிற்சி, தமிழ்ப்பகைவர்க்கு எதிர்ப்பு, தமிழர் அடையாளங்கள், தனித்தமிழ் எனப் பல பரிமாணங்களிலும் நற்றமிழின் பணி சிறப்பானது; பாராட்டுதற் குரியது. மூத்த தமிழ்க்குடியும் செந்தமிழ் வளர்த்த மூவேந்தர் மரபினருமான மள்ளர், குடும்பர் எனும் தேவேந்திரகுல வேளாளரின், தமிழரின் போற்றுதற்குரியீர், வாழ்க நீடூழி.

முனைவர் **குருசாமி சித்தர்** ஆசிரியர் 'மள்ளர் மலர்'
10/2, நால்வர் நகர், பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 641 046.

## அந்தாதி அன்பர் மா.தன. அருணாசலம்-புட்பா இணையரின் மணி விழா

தி.ஆ. 2035 சுறவம் 11 ஆம் நாள் (25-1-2004) புதுச்சேரி, இராசீவு காந்தி நகர், தமிழ் மகள் தெரு, 18 ஆம் எண் இல்லில் நற்றமிழன்பரும் சிறந்த பாவலருமான அந்தாதி அன்பர் **மா.தன.அருணாசலம்-புட்பா** இணையரின் மணிவிழா சிறப்பாக நடந்தது. மணி விழா இணையர் மேலும் பல்லாண்டுகள் நலத்துடன் வாழ்ந்து நற்றமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிட நற்றமிழ் வாழ்த்துகிறது. **-ஆசிரியர்**

www.padippakam.com



# நச்சினார்க்கினியரும் பேராசிரியரும்

கலைமாமணி நூற்கடல் **தி.வே. கோபாலய்யர்** (தொடர்ச்சி)

இனி, தொல்காப்பிய உரையாளராகிய பேராசிரியரைப் பற்றி நோக்குவோம். சென்ற நூற்றாண்டின் இறுதியில் திருவாளர் தாமோதரம்பிள்ளையவர்களால் அச்சிடப்பட்ட தொல்காப்பியப் பொருளதிகாரவுரை 'நச்சினார்க்கினியர் உரை' என்றே பதிப்பிக்கப்பட்டது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த 'செந்தமிழ்' என்ற இதழின் சில கட்டுரைகள் வாயிலாக அச்சிடப்பட்ட பொருளதிகார உரையின் பின் நான்கு இயல்கள் பேராசிரியர் உரை என்பது நிறுவப்பட, பின் அச்சிடப்பட்ட பவானந்தர் பதிப்பு முதலியவற்றில் பொருளதிகாரத்தின் முன் ஐந்து இயல்கள் நச்சினார்க்கினியர் உரை எனவும் பின் நான்கு இயல்கள் பேராசிரியர் உரை எனவும் பதிப்பிக்கப்பட்டன.

1917 - இல் செய்யுளியலின் நச்சினார்க்கினியர் உரை அச்சில் வெளிவந்தது. இன்று, செய்யுளியலின் நச்சினார்க்கினியர் உரையை அவ்வியலின் பேராசிரியர் உரையோடு ஒப்பிட்டு நோக்கும் வாய்ப்பு நமக்கு உள்ளது. இவ்விரண்டனையும் நோக்கப் பேராசிரியருடைய வாக்கிய அமைப்பும் செய்திகளைக் குறிப்பிடும் திறனும் நுண்மாண் நுழைபுலன் உடையோர்க்கு அன்றி மற்றவருக்குத் தெளிவாகப் புலப்படுவனவாக இல்லை என்பதும், இச்சிக்கலை உளம்கொண்டு மாணாக்கருக்கு உய்த்துணர்வு இன்று (தொ. சொ. 203 நச்.) என்று இடைகடை மாணாக்கருடைய திறம் உணர்ந்து ஆசிரியராகப் பாடம் பயிற்றிய நச்சினார்க்கினியர் செய்யுளியலின் பல நூற்பாக்களுக்குப் பேராசிரியர் இயற்றிய உரையைச் சாரமாகப் பிழிந்து கற்பார் எளிதாக உணரும் வகையில் உரை வரைந்திருக்கின்றார் என்பதும், 7, 8, 80, 101, 116, 118, 210, 237, 242 என்ற எண்ணுடைய செய்யுளியல் நூற்பாக்களிலேயே தம் கருத்தினைப் பல இலக்கிய மேற்கோள் முதலியனகொண்டு விரித்துரைத்துள்ளார் என்பதும் புலப்படும். எனவே, பேராசிரியரால் குறிப்பிடப்படாத நுண்ணிய அரிய செய்திகள் மிகச்சிலவே நச்சினார்க்கினியருடைய உரையில் இடம்பெற்றிருத்தல் உணரப்படும்.

நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணி, கலித்தொகை, பத்துப்பாட்டு என்ற இலக்கியங்களுக்கும் உரை வரைந்திருப்பதனாலும், பேராசிரியர் உரையைக் கொண்டுள்ள மெய்ப்பாட்டியல், உவமவியல், மரபியல் ஆகியவற்றின் நூற்பாக்களை மேற்கோள் காட்டுமிடத்துப் பெரும்பாலும் அவர் உரையையே பின்பற்றியிருப்பதனாலும், அவ்வியல்கள் பற்றிய நச்சினார்க்கினியரின் நுட்பமான செய்திகளை அவ்விலக்கிய உரைவாயிலாகவே அறிதற்கு உரிய வாய்ப்புக் கிட்டியதனாலும் அவ்வியல்களுக்கு நச்சினார்க்கினியர் இயற்றிய உரையினைத் தனியே ஏடுகளில் பொறிக்காமல் மிகுமுயற்சியும் சிறுபயனும் பற்றிய மடிமை காரணமாக நம்முன்னோர்கள் நெகிழ்த்துவிட்டனர் என்றே கருதவேண்டியவராக உள்ளோம்.

நச்சினார்க்கினியர் பேராசிரியர் பெயரைச்சுட்டி முன்னர்க் காட்டிய இருசெய்திகளும் பேராசிரியர் இயற்றியிருந்த பொருளியல் உரையில் காணப்பட்டிருக்கலாம். அவை முறையே 'உடனுறை உவமம்' (பொ. 242)

www.padippakam.com



'உயர்மொழிக்கு உரிய உறழுங் கிளவி' (பொ. 236) என்ற நூற்பாக்களின் பேராசிரியர் உரையில் அமைந்திருக்கலாம் என்று கருதுகிறோம்.

266ஆம் நூற்பா உரையில் 'களவியலுள் கூறினாம்' 267ஆம் நூற்பா உரையில் 'அகத்திணையியலுள் கூறினாம்' எனவும் பேராசிரியர் குறிப்பிடுதலின் அவர் பொருட்படல முன்ஐந்து இயல்களுக்கும் உரை எழுதியமை புலனாகிறது.

அதனால் அவர் உரை எழுதிய முன் ஐந்து இயல்களோடு ஏனைய நான்கு இயல்களுக்கும் பெரும்பாலும் பேராசிரியர் உரையைத் தழுவி எளிய முறையில் நச்சினார்க்கினியரால் உரை வரையப்பட்டிருக்கலாம். பொருளியல் என்பது அகத்தைப் பற்றிய அகத்திணையியல், களவியல் கற்பியல் என்பன, புறத்தைப் பற்றிய புறத்திணையியல், என்பனவற்றின் எச்சமாகிய செய்திகளைக் குறிப்பிடும் இயல் ஆகலானும், இவ்வியற்கு நச்சினார்க்கினியர் இயற்றிய உரை தெளிவும் பொருளாழமும் கொண்டு விளங்குவதனாலும், பேராசிரியர் உரைநயம் முழுதும் இதன்கண் அடங்கியிருத்தலினாலும், முன்னையோர் பொருளியலுக்கு நச்சினார்க்கினியர் உரையே கொண்டு பேராசிரியர் உரையை நெகிழ்த் திருக்கலாம் என்று கருதுகிறோம். இங்ஙனமே முன் நான்கு இயல்களின் நிலைகளும் ஆகியிருக்கலாம்.

பேராசிரியர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரைவரைந்திருக்கலாம் என்று முடிவு செய்வதற்குப் போதிய அகச்சான்றுகள் அவர் வரைந்துள்ள உரையிலிருந்து கிட்டவில்லை.

'குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்' - தொ. எ. 2

'அரையளபு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங் காலை' - தொ. எ. 13

'குறுமையும் நெடுமையும் அளபிற் கோடலின்
தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல' - தொ. எ. 50

'மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்துவேறு இசைப்பினும்
எழுத்துஇயல் திரியா என்மனார் புலவர்' - தொ. எ. 52

'அத்தின் அகரம் அகரமுனை இல்லை' - தொ. எ. 125

'தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந்து ஏகா ரம்மே' - தொ. சொ. 259

என்று பேராசிரியர் மரபியல் இறுதியில் விளக்கிக்கூறும் சில நூற்பாக்களைத் தவிர, ஏனையவாய் அவர் எடுத்துக்காட்டிய பல நூற்பாக்களுக்கும் அவர் கருதும் உரையையே நச்சினார்க்கினியரும் கொண்டுள்ளார்.

மாறுகொளக்கூறல் எனத் தழீஇக் கொள்ளப்பட்ட சிதைவு (எழு. 415. நச்.) தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல் என்னும் சிதைவின்பாற்படும்; பதமுடிப்பு என்பதோர் இலக்கணம் படைத்துக்கோடல் (எழு. 482 நச்) போன்ற அவர் கருத்துக்களும் நச்சினார்க்கினியரால் ஏற்றுக்கொள்ளப் பட்டுத் தம் உரையில் பொருத்தமான இடங்களில் சுட்டப்பட்டுள்ளன.

(தொடரும்)

www.padippakam.com



## பாவலரேறு செவ்வேள் அவர்களின் மடல்

அன்பு சான்ற இறைவிழியன் அவர்கட்கு

வணக்கம், என் மகன் இறந்த நிகழ்வைக் 'கண்ணீர் அஞ்சலி' என்ற தலைப்பில் செய்திக் குறிப்பாக வெளியிட்டமைக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பில் நீத்தார் நினைவேந்தல் நிகழ்ச்சியில் "தமிழன்பர்கள் பலர் கலந்து கொண்டனர்" என்று குறித்திருந்தீர்கள். யார் வந்தார் யார் வரவில்லை என்று தெரிந்து கொள்ள இயலாமல் என் வீட்டின் மூலை அறையில் முடங்கிக் கிடந்தேன். நிகழ்ச்சியன்று காலை 10.00 மணியளவில் அறவணன் (சுந்தரசண்முகனாரின் மகன்) என் அறைக்கு வந்து, திருமுருகன் மற்றும் தமிழறிஞர் பலரும் வெளியிலே அமர்ந்துள்ளதாகச் சொன்னார். உடனே எழுந்து வந்தேன், சோர்வையும் பொருட்படுத்தாது. தெருவாயிலுக்கு வந்து வந்திருந்த அனைவரையும் நோக்கி ஒரு கும்பிடு போட்டேன். அவ்வளவுதான்! மீண்டும் அறைக்குள் சென்று படுத்துவிட்டேன். ஒவ்வொருவரையும் தனித்தனியே கண்டு பேச உடல்நலம் இடந்தரவில்லை. நான் படுத்த படுக்கையாயிருந்த விவரம் உங்களுக்குத் தெரிந்திருக்காது. எனவே, அதை இங்கே சொல்ல விழைகிறேன்.

03.11.2003 அன்று காலை 9.00 மணியளவில் என் மகனின் உயிர் உடலை விட்டுப்பிரிந்தது. 04.11.2003 அன்று அடக்கம் செய்யப்பட்டது. 05.11.2003 அன்று காலையில், நான் "நீத்தார் நினைவேந்தல்" அழைப்பிதழ் அச்சடிக்கும் பணியை மேற் கொண்டேன். ஆசிரியர் இ. செயராமனின் துணையுடன் புதுவை தியாகராயர் வீதியில் உள்ள மறுதோன்றி அச்சகம் ஒன்றிற்குச் சென்றேன். அழைப்பிதழின் வடிவமைப்புப் பற்றி இருவரும் கலந்து பேசி முடிவு செய்தோம். அப்போது தான் ஓர் எண்ணம் தோன்றியது. அழைப்பிதழில் ஒருபக்கம் வெறுமையாய் இருந்தது. அந்த இடத்தில் திருவாசகப் பாடல் ஒன்றைப் போட்டு இட்டு நிரப்பலாமே என்று நினைத்தேன். எந்தப் பாடலைப் போடுவது? இறந்து போன என்மகன் அம்மாவிடமும் அப்பாவிடமும் நீங்கா அன்புடையவனாக இருந்தவன். எனவே "அம்மையே அப்பா!" என்று தொடங்கும் பாடல் பொருத்தமாக இருக்கும் என்று நினைத்தேன். பாடலை நினைவு படுத்தி எழுதத் தொடங்கினேன். என்ன கொடுமை பாருங்கள். முதலடியில் மூன்றாம் சீரும் நான்காம் சீரும் நினைவுக்கு வராமல் முரண்டு பிடித்தன. இத்தனைக்கும் எனக்கு நன்றாகத் தெரிந்தபாடல் அது. பல கூட்டங்களில் மேற்கோளாக அதைப் பயன்படுத்தியுள்ளேன். பாடல் முழுவதும் நினைவுக்கு வந்தது அந்த இரண்டு சீர்கள் நீங்கலாக. என்ன முடுக்கியும் நினைவாற்றல் பயன்தரவில்லை. அச்சக உரிமையாளரிடம் 'திருவாசகம் உள்ளதா' என்று கேட்டேன். "இல்லை" என்றார். அருகில் இருந்த சிவன் கோயில் வாயிலில் இருந்த புத்தகக் கடை நினைவுக்கு வந்தது. "இருங்கள் நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று செயராமனிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினேன். மேலும் இடர்ப்பாடு! கடை திறந்திருக்கவில்லை. சோர்வுடன் மீண்டேன். சரி! வீட்டுக்குப் போய்ப் பாடல் முழுவதையும் எழுதி அனுப்புகிறேன். அப்புறமாக அச்சேற்றுங்கள்" என்று செயராமனிடமும் அச்சக உரிமையாளரிடமும் சொல்லிக் கொண்டு விடைபெற்றேன். என் இளையமகன் தன்னுடைய துள்ளுந்தில் ஏற்றிக் கொண்டு அழைத்துச் சென்றான். நல்ல வெய்யில்! வீட்டுக்குள் நுழைந்தேன்!

www.padippakam.com



அவ்வளவுதான்! எப்படித்தான் அந்த நெஞ்சுவலி வந்ததோ தெரியவில்லை. அதோடு மூச்சு விடுவதற்கும் தொல்லைப் பட வேண்டியிருந்தது. எனக்குப் புரிந்துவிட்டது. அது மாரடைப்பின் அறிகுறி என்று. மகனையும் மருமகப் பிள்ளையையும் அழைத்துச் சொன்னேன். காலந்தாழ்த்தாது அவர்கள் ஒரு மகிழுந்து கொண்டுவந்தார்கள். ஏறிக்கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தோம். நுழைவுச் சீட்டு வாங்கிக் கொண்டு தீவிரசிகிச்சைப் பிரிவில் சேர்த்தார்கள். மாரடைப்புதான் என்று உறுதி செய்யப்பட்டது. மணிக்கொருமுறை மருந்து மாத்திரை கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். அன்றைய பொழுது நிரயத்தில் இருந்தது போல் துன்புற்றேன். இரவில் சிறுதூக்கம். மறுநாள் விடிந்தது. அப்பாடா! என்று பெருமூச்சு விட்டேன். வலிமுழுமையாக மறைந்துவிட்டது. மறுபடியும் வரலாம் விழிப்பாயிருங்கள் என்றார்கள். மாத்திரைகள் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்தன. ஆறு நாட்கள் மருத்துவ மனையிலே முடக்கம். ஏழாவது நாள் வீட்டுக்கு அனுப்பினார்கள். வீட்டிற்கு வந்தும் அறையில்தான் ஒடுங்கிக் கிடந்தேன். இந்த நிலையில்தான் யாருக்கும் சொல்லியனுப்பவோ வந்திருந்தவர்களைக் கவனிக்கவோ முடியாமல் போய்விட்டது.

இன்னும் என்மகனைப் பிரிந்த துயரத்திலிருந்து நான் மீளவில்லை. எனக்குத் தெரிந்த எல்லோரிடமும் அவன் நல்ல பெயர் வாங்கியிருந்தான். இலக்கிய வட்டத்தில் எனக்கு அறிமுகமாகிய பலரையும் அவன் அறிவான். அவர்கள் எல்லோருமே அவனை "நல்ல பிள்ளை" என்று சொன்னபோது "சான்றோன் எனக் கேட்ட தாயைப்" போல நான் மகிழ்ந்தேன். என்னைப் போல எழுத்துத் துறையில் கால்பதிக்க வேண்டும் என்று அவனுக்கு விருப்பம் இருந்தது. ஆனால் அதற்கேற்ற தகுதியை அவன் வளர்த்துக் கொள்ள வில்லை. ஒருமுறை என்னிடம் சொன்னான். "அப்பா! நான் எழுதியது குங்குமத்தில் வந்திருக்கிறது!" என்றான். அந்தக் கிழமைக்குரிய "குங்குமம்" இதழை வாங்கிப் புரட்டிப்புரட்டிப் பார்த்தேன். என்குத் தட்டுப் படவில்லை. "என்னடா காணோமே!" என்றேன். இங்கே கொடுங்கள் என்று இதழை வாங்கி ஒரு பக்கத்தை எடுத்துக் காட்டினான். ஆமாம்! அவன் பெயர் வந்து தான் இருந்தது. ஆசிரியர்க்கு மடல் பகுதியில்! சென்ற இதழில் வெளிவந்த சிறுகதை (ஏதோ ஒரு சிறுகதை) மிகச் சிறப்பாக இருந்தது!. இவ்வளவு தான் அவன் எழுதியது. இப்படிப் பல ஆவல்களை வளர்த்துக் கொண்டு வாழ்ந்து மறைந்தான். நாடகத்தில் நடிக்க வேண்டும் என்று முயன்றான். உள்ளூர் நாடகங்கள் இரண்டொன்றில் நடித்தும் இருக்கிறான். ஆனால் பெயர் சொல்லும் அளவுக்கு இல்லை. திரைப்படத்திலும் தலைகாட்ட வேண்டும் என்று அவனுக்கு ஆவல். ஒரு கட்டத்தில் அதுவும் நிறைவேறியது. பிரபு நடித்த ஒரு படத்தில் தலைகாட்டிருக்கிறான். பிரபுவுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கிறான். அந்தப் படம்தான் நீத்தார் நினைவேந்தலில் போட உதவியது.

கடைசியாக மாறன் மறைந்தபோது, கலைஞர் சொன்னது நினைவுக்கு வருகிறது. "நீ போய் விட்டாய்! உன்னுடைய நினைவுகளை உன்னால் எடுத்துச் செல்ல முடியுமா?"

நானும் அதையேதான் சொல்ல விரும்புகிறேன்.

"மகனே! நீ போய் விட்டாய்! உன்னுடைய நினைவுகளை உன்னால் எடுத்துச் செல்ல முடியுமா?".

www.padippakam.com



# படைப்பும் இலக்கணமும்

பேராசிரியர் ம.இலெ. தங்கப்பா

அழகுப் போட்டி நடத்துகின்றார்கள். உடலின் இன்ன இன்ன பகுதிகள் இன்ன இன்ன அளவில் இருக்க வேண்டும் என்ற இலக்கணம் தேர்வில் பின்பற்றப் படுகின்றது. ஆயினும், இவ்விலக்கணப் படி சிறந்த அழகி என்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருத்தியை விடத் தேர்வு பெறாத பெண்கள் அழகாயிருப்பதைக் காண்கின்றோம்.

மாணவர்க்கு நடத்தும் பேச்சுப் போட்டியில் கருத்து, மொழிநடை, பேச்சாற்றல் என்று பகுத்துத் தனித் தனி மதிப்பெண் இட்டுப் பின் மூன்றினையும் கூட்டிவரும் மொத்த மதிப்பெண் அடிப்படையில் சிறந்த பேச்சாளரைத் தேர்ந்தெடுக்கின்றோம். இதுவும் சிலவேளை சரியான தேர்வாக அமைவதில்லை. பேச்சாற்றல் குறைந்த ஒருவன் கருத்திலோ, மொழி நடையிலோ மிகுந்த மதிப்பெண் பெற்று முதலிடத்துக்கு வருவதுமுண்டு.

விதி முறைகள் வழிகாட்டிகளே; அவையே எல்லாமும் அல்ல.

ஒரு பாட்டுக்கு யாப்பிலக்கணம் மிக மிக அடிப்படையானது. யாப்புப் பிழையுடன் அமையும் பாடல் சான்றோரால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆயினும் யாப்பு விதிகளை இரண்டாகப் பகுக்கலாம். மீறக் கூடாத அடிப்படை விதிகள் என்றும் நெகிழ்ச்சிக்குரிய வடிவச் சீர்மை விதிகள் என்றும் அவற்றைக் கொள்ளலாம். அடிப்படை விதிகள் தவறாமல் பின்பற்றப்பட வேண்டியவை. பிற விதிகள் அப்படி அல்ல. அவற்றில் நெகிழ்ச்சிக்கு இடம் உண்டு.

ஓர் உந்துவண்டியில் இயக்கும் பொறி கொஞ்சமும் பழுதுபடாமல் இருக்க வேண்டும். காற்றுருளைகளில் ஓட்டை விழாமல் இருக்க வேண்டும். இவை கட்டாயம் ஆனாலும் வண்டி நன்றாக ஓடுவதற்கு அதன் இருக்கைகளும் பலகணிகளும் நேர்த்தியாக இருக்க வேண்டும் என்பதில்லை. இருக்கைகள் கொஞ்சம் கிழிந்திருந்தாலும், பலகணிக் கண்ணாடிகள் விரிசல் விட்டிருந்தாலும் வண்டி ஓடும். சில வண்டிகளில் இருக்கைகள் மிகமிக நேர்த்தியாகவும் அழகாகவும் இருக்கும். வேறு வண்டிகளில் அவை நேர்த்தியில்லாமல் இருக்கலாம். கொஞ்சம் ஒடுக்கமாகவும் இருக்கலாம். அந்த அந்த வண்டியின் தன்மை அது.

வெண்பாவை எடுத்துக் கொண்டால் செப்பலோசையில் சிறிதும் பிழை நேரக் கூடாது. மாமுன் நிரை, விளமுன் நேர், காய் முன் நேர் என்பவை கட்டாயம். ஆயினும் எதுகை மோனைகள் அப்படி அல்ல.

www.padippakam.com



அவற்றுக்கென அமைந்த முறைப்படி அவை வருவது சிறப்புத்தான் எனினும் அவ்வாறு வராமலும் இருக்கலாம். அது பிழை ஆகாது.

யாப்பிலக்கணம் சற்றும் பிழையில்லாமல் அமைந்திருப்பது முதல் நிலை. நேர்த்தியாக இருப்பது இரண்டாம் நிலை. சீர்கள் ஓசைப் பிழையில்லாமல் அமைந்திருத்தல் வேண்டுமே தவிர, ஒரே சீர்மையாகத் தான் வரவேண்டுமென்பதில்லை. சில யாப்பு வடிவங்களில் ஒரே சீர்மை கட்டாயம். வேறு சில வடிவங்களில் ஒரே சீர்மை வரத் தேவையில்லை.

ஒருவிளம் இருமா அரையடியாக வரும் அறுசீர் மண்டில (விருத்த)த்தில் மூன்றாம் சீரும் ஆறாம் சீரும் தேமாவாகவே இருத்தல் வேண்டும். இதில் நெகிழ்ச்சிக்கு இடமில்லை. மற்ற இடங்களில் விளச்சீர் வருமிடத்து எந்த விளச்சீரும், மாச்சீர் வருமிடத்து எந்த மாச்சீரும் வரலாம். ஓசை சிறிதும் பிழைப்பதில்லை.

எண்சீர் மண்டில வகை ஒன்றில் மூவசைச் சீர்கள் தம்முள் மாறி மாறி வரலாம். மூவசைச் சீர் வருமிடங்களில் ஈரசைச் சீர்வரின் பிழையாகும். என்றாலும் இதிலும் கூட நெகிழ்ச்சிக்கு இடம் உண்டு.

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்தே
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை

என்ற பாரதிதாசன் அடியில் மூவசையாக வரவேண்டிய முதற்சீர் ஈரசைச் சீராக வந்துள்ளது. மேலாகப் பார்ப்பின் இது பிழையே எனினும் 'நீலவான்' என்பதில் வான் என்ற சொல் அளபெடுத்து வாஅன் என ஒலிப்பதால் மூவசைச் சீரின் ஓசை வந்து விடுகின்றது.

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளை கண் விழித்து நோக்க

என வரும் கம்பரின் அடிகளில் ஈரசையாய் வரவேண்டிய இரண்டாமடியில் முதற்சீர் மூவசைச் சீராய் வந்துள்ளது. இதற்கு இரண்டு வகையில் அமைவு கூறலாம். முதற்சீர் மாங்காய்ச் சீராக வரினும் ஓசை கெடாது என்பது ஓர் அமைவு. 'கொண்டல்கள்' என்பதில் லகர ஒற்று மெலிந்தொலிப்பதால், ஓசையைப் பொறுத்து அதை விளச்சீராகவே கொள்ளலாம் என்பது மற்றோர் அமைவு.

மண்டில (விருத்த)ப் பாக்களில் நான்கடிகளிலும் எதுகை பிழையாதிருத்தல் வேண்டும். இது கட்டாயம் ஆனால் மோனை அப்படியன்று; வந்தால் அழகு தான். ஆனால், கருத்துப் பெரிதா மோனை பெரிதா என்று வருகையில் கருத்தே பெரிது. மோனை அன்று. மோனை அமைந்த ஓரடியை விட, மோனை அமையாத அடி அழகாகவும் உயிர்ப்பாகவும் இருப்பதுண்டு. (தொடரும்)

www.padippakam.com



# நூல்-அறிமுகம்

**"பாமுகில்"** ஆசிரியர்: **க. தமிழமல்லன்,** க.மு., கல்.இ., வெளியீடு: தனித்தமிழ்ப் பதிப்பகம், 64, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009, விலை:உ௹.45/

இந்நூலில் **"பாமுகில்"** தொடங்கி **"நடப்பியல்"** ஈறாகப் பத்துத் தலைப்புகளில் பாடல்களும், மூன்று கதைப் பாடல்களும் படைத் திருக்கிறார். நூலாசிரியர் **க. தமிழமல்லன்.** இவற்றில் முதல் ஒன்பது தலைப்புக்களில் உள்ள பாடல்கள் பல நிகழ்ச்சிகளில் அரங்கேறி யவையாகும். இந்நூலில் உள்ள பாக்கள் அனைத்திலும் குமுகாய இழிநிலைகளைச் சாடி, முன்னேறும் நெறிமுறைகளை வகுத்துக் கூறி இருக்கிறார் நூலாசிரியர். **பாவாணர், பாவேந்தர், வாணிதாசன், புதுவைச் சிவம்** போன்றோர் ஆற்றிய தொண்டுகளைப் போற்றும் பாடல்கள் மிகச் சிறப்பாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன. காட்டுக்குப் பாவாணர் பற்றிய பாடல் அடிகள் வருமாறு. **"தூய்தமிழ்க்குப் பாவாணர் போலிங்கில்லை - எயில்போல மொழிக்காவல் செய்திருந்தார். இங்கெவரும் பாவாணர் போலாவாரோ?"** "பாமுகில்" குமுகாய வளர்ச்சிக்கு நன்மழையாகப் பொழியும் நூலாகும்.

**"கொழுந்து"** ஆசிரியர்: **கலைமாமணி கோவி. கலியபெருமாள்;** வெளியீடு : கோவி. கலியபெருமாள், 74, கடலூர்ச்சாலை, அரியாங்குப்பம், புதுச்சேரி - 605 007. விலை : உ௹. 35/-

சிறுவர்களுக்கான இப்பாடல் நூலில் "ஆதவன் எழுந்தான்" தொடங்கி நாட்டுப்பண்" ஈறாகத் தொண்ணூறு தலைப்புக்களில் பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்பது பாடல்கள் நீங்கலாக அனைத்துப் பாடல்களும் எட்டடிப் பாடல்களே! சிறுவர் விரும்பிப் படித்து உளத்தில் நிறுத்தி இசைகூட்டி அசைபோடும் வகையில், இனிய நடையில் எளிய தமிழில் பாடல்களைப் பாடிப் பாடி அமைத்திருக்கிறார் நூலாசிரியர் கலைமாமணி கவிஞர் கோவி. கலியபெருமாள். சிறுவர் இலக்கிய விருது பெறுவதற்குரிய வாய்ப்பு இந்நூலுக்குண்டு.

**"கம்பராமாயணத்தில் இயற்கை வனப்புகள்"** ஆசிரியர்: **புலவர் கோ. தனபாலன்;** வெளியீடு : புலவர் கோ. தனபாலன், 25, நவசந்தி வீதி, வில்லியனூர், புதுச்சேரி-605 110; விலை உ௹. 30.

இராமாயணத்தில் இயற்கையின் அழகைக் கம்பர் உவமையாகவும், உருவகமாகவும் கதைமாந்தரின் சிறப்புக்கேற்பப் பாடியுள்ள 231 இயற்கை எழில் ஒளிரும் பாடல்களின் சிறப்பை இந்நூலில் காணலாம். நூலாசிரியர் புலவர் கோ. தனபாலன் மிகச் சிறந்த முறையில் இயற்கை வனப்பைச் சிறப்பிக்கும் கம்பராமாயணப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து விளக்கி இருக்கும் பாங்கு போற்றுதற்குரியதாகும். கம்பர் (சூரியனை) கதிரோன், கதிரவன், வெய்யோன், உறுசுடர் எனவும் (சந்திரனை) வெண்டிங்கள், திங்கள், தண்மதி, எனவும் ஆகாயத்தை வானம் எனவும் நல்ல தமிழ்ச் சொற்களைப் பாடலில் கையாளுகிறார். நூலாசிரியர் சூரியன், சந்திரன், ஆகாயம் என்று சிறு தலைப்பில் குறிப்பிடுவதைத் தவிர்த்துக் கம்பரின் நல்ல தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தியிருப்பின் மேலும் சிறப்பாக விளங்கும் இந்நூல்.

- புலவர் **செ. இராமலிங்கம்**

www.padippakam.com



# நற்றமிழ்க்கு வந்த நன்மடல்கள்

பொங்கல் திருநாளில் புத்தின்பம் அளிக்கும் இதழாக இருந்தது. தமிழின் புகழ்வளர வேண்டுகிறேன். - மாணவி மு. சக்தி, மயிலம்.

நற்றமிழ் இதழைப் படித்தேன். மிகவும் சிறந்த கருத்துக்கள் சுவையாகவும் புதிய விளக்கங்களுடனும் இருந்தன. நற்றமிழ் வளர எங்கள் புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்கள்.

**- மாணவி மு. சிவக்குமாரி, விருத்தாசலம்.**

எங்களைப் போன்ற மாணவர்கள் மேலெழத்தூண்டுகோல் போன்றும் ஊன்றுகோல் போன்றும் கைத்தாங்கித் தூக்கி விடுவதற்காகவே உங்கட்கு நன்றி. **- மாணவி அ. மங்கலட்சுமி, மயிலம்.**

நான் நற்றமிழ் இதழைப் படித்தேன். மிகப்புதுமையாகவும் வியக்கத்தக்க அளவிலும் இருக்கிறது. ஆர்வம் இல்லாதவர்களையும் ஆர்வம் காட்ட வைக்கும் உங்கள் இதழுக்கு நன்றி.

**- இரா. செல்வராணி, வயலூர்.**

முகப்புப் பாடல் எழுச்சியூட்டியது. தமிழன் தன் வீட்டுக் குழந்தைக்கு 'ஏப்பி பெர்த்டே' கொண்டாடுகிறான். தைத் திருநாளில் மனை வாயிலில் 'ஏப்பி பொங்கல்' வரையப்படுகிறது. என்னே இழிதகைமை இவ்விழிநிலைமாறிப் பொய்மயக்கம் தெளிந்து தமிழ்ப் பொங்கல் கொண்டாடப்படும் நாளை எதிர்பார்ப்போமாக.

**-ஆறு. தமிழ்நிதிவேந்தன், புதுவை.**

நற்றமிழ் (15-12-2003) இதழில் நற்றமிழுக்கு வந்த நன்மடல்கள் பகுதியில் இரண்டாம் மடலில் இறும்பூது, அறுகுபோல் என்ற இரண்டு சொற்களிலும் வல்லின 'று' வருதல் வேண்டும். 15-1-2004 இதழில் 'நற்றமிழ் ஆய்வில்' 132 ஆம் பாடலில் 'காக்க வாராய்' என்ற சொல் வரவில்லை. அச்சொல் 139 ஆம் பாடலில் வந்துள்ளது.

**- புலவர் த. தட்சணாமூர்த்தி, காரைக்கால்.**

(நன்றி. திருத்திக் கொள்கிறேன் - ஆசிரியர்)

## உலகத் தமிழ்க் கவிஞர்கள் கவிதைத் தொகுப்பு

'உலகத் தமிழ்க் கவிதை'த் தொகுப்புப் பணிகள் தொடங்கிவிட்டன. பல கவிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்கக் கவிதைகள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் 31-03-2004 என மாற்றப்பட்டுள்ளது.

குறிப்பு : எழுதப்பட்ட சிறந்த பாடல்களுள் 5 பாடல்கள் மட்டும் 10 பக்கங்கட்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

விரைந்து அனுப்பித் தொகுப்புப் பணி சிறந்திடத் துணைபுரிய வேண்டுகிறோம்.

**ப.மருதநாயகம்,** இயக்குநர்

புதுவை மொழியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், (புதுவை அரசு நிறுவனம்)

112, காமாட்சியம்மன் கோயில் தெரு, புதுச்சேரி - 605 001.

படிப்பகம்

www.padippakam.com



## வஞ்சித்துறை - 6

விடுபட்ட பாடல்கள் (காலங் கடந்து வந்தவை)

வள்ளுவர் திருக்குறளே
தெள்ளிய தமிழ் அறநூல்
உள்ளமே இருத்திடிலே
வெள்ளமாய் மகிழ்வெழுமே!
170. - கிருட்டினமூர்த்தி, சென்னை.

ஈதலில் இன்பமோங்கும்
சாதலும் இலதென்று
காதலைச் செய்தலாலே
நோதலும் நேர்வதில்லை
171. - இரெ. கலைச்செல்வி, மயிலம்.

பார்த்தவை எல்லாம்உன்
தார்மண மேனிஎங்கும்
தேர்வழி வந்ததென்றால்
சேர்ந்திடும் இன்பவாழ்வே!
172. - இரா. புவனேசுவரி, மயிலம்.

செந்தமிழ் பயின்றேனே
சிந்தனை தெளிந்தேனே
மந்தமே இலாவாழ்வில்
வந்திடும் இன்பமெலாம்
173. - ம. சித்திரா, உளுந்தூர்பேட்டை.

கூசிடும் தீப்பேச்சைப்
பேசிடத் தப்பாமல்
வீசிடும் தென்றல்போல்
பேசிடின் இன்பந்தான்.
174. - வீ. வில்வநாதன், பெங்களூர்.

பெற்றவர் தம்மைநாம்
உற்றதோர் வகையினிலே
நற்றவ நிலைபோல
முற்றுமே காத்திடுவோம்.
175. - மு. சிவக்குமாரி, விருத்தாசலம்.

கொஞ்சுவ(து) ஆங்கிலத்தை
மிஞ்சுவ(து) இந்தியினை
தஞ்சமோ கன்னடத்தில்
எஞ்சுவ(து) எம்தமிழோ?
176. - செல்வராணி, விருத்தாசலம்.

குற்றமில் பத்தனையே
பற்றினால் காத்திடுவாள்
வெற்றியைத் தான்உனக்குக்
கொற்றவை நல்கிடுவாள்!
177. - அ. மகாலட்சுமி, மயிலம்.

"நல்லவர் உள்ளமென்றும்
வெல்வது தப்பாது!
நல்லபண் பில்லாதான்
அல்லலே அடைவானே"
178. - இராமலிங்கம், விருத்தாசலம்.

பாய்வதால் காடழியும்
காய்வதால் ஊரழியும்
சாய்வதால் நிலமழியும்
ஒய்வதால் நீஅழிவாய்!
179. - கத்தூரிராசா, சென்னை.

## தொல்காப்பியம் வெளியீட்டு விழா

(ஒரே வீச்சில் அனைத்து உரைகளும்)

தி.ஆ. 2034 சிலை 21 இல் (5-1-04) சென்னைத் தேவநேயப்பாவாணர் நூலகக் கூட்டரங்கில் தொல்காப்பியம் - அனைத்து உரைகளும் - வெளியீட்டு விழா, தமிழ் மண் பதிப்பகத்தால் சிறப்பாக நடத்தப் பெற்றது. முதுபெரும் புலவர் இரா. இளங்குமரனாரின், தொல்காப்பிய வாழ்வியல் விளக்கத்துடன் உரைகள் சிறப்பாக வெளியிடப் பட்டுள்ளன. இப்பணியைச் சிறப்பாகச் செய்துள்ள தமிழ்மண் பதிப்பகத்தார்க்கும் உறுதுணையாக இருந்த சான்றோர்க்கும் நற்றமிழ் தன் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

-ஆசிரியர்.

படிப்பகம்

www.padippakam.com



ஆய்வரங்கம்

## செங்கீரைப்பருவம் விளக்கம்

பெரும்புலவர் **மா.சின்னு,**
வேலூர் (நாமக்கல்)

பாடப் புத்தகத்தில் செங்கீரைப் பருவம் பற்றிய பொருள் விளக்கத்தில் குழப்பம் உள்ளதெனக் கடலூர் **துரையன்** குறிப்பிட்டிருந்தார். இருவிதப் பொருள்களை அறிஞர்களே தந்துள்ளனர். அவை :

'குழந்தையின் இரண்டாவது பருவம் செங்கீரைப் பருவம், இளங் குழந்தை ங்க் ங்க் என்று கூறக் கேட்டுத்தாய்மார் உவக்கும் பருவம் இது. தொடையமைதிகள் இல்லாத ஒன்றைச் செந்தொடையென்பது போலச் சொல்லுக்குரிய அமைதியில்லாததைச் செங்கீரை என்றனர் போலும். கீர்-சொல். செங்கீரையை 'ஒரு நிருத்த விசேடம்' என்று சொல்லுவார் பெரியவாச்சான் பிள்ளை' என்று குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு ஆராய்ச்சியுரையில் கூறுவார் உ.வே.சா. மேலும் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் செங்கீரைப் பருவம் (1) குறிப்புரையில் செங்கீரையாடியருள் - செவ்விய சொற்களை ஆடியருள் என்று பொருள் கூறுவார்.

இதனால், செங்கீரை-செவ்வியசொல் என்பதே உ.வே.சா அவர்களின் கருத்து எனத்தெரிகிறது. பெரியவாச்சான் பிள்ளை, செங்கீரை - ஒரு நிருத்த விசேடம் என்கிறார். நிருத்தம் - கூத்து, ஆடல் இவர் கொண்ட பொருளுக்கு வலிமை தருபவை

ஒருதாள் உந்தி எழுந்திரு கையும்
    ஒருங்கு பதித்து நிமிர்ந்து
அருள்பொழி திருமுகம் அசைய
    அசைந்தினி ஆடுக செங்கீரை

எனவரும் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்-செங்கீரைப் பருவம் (8) அடிகளும்,

இருகை மலரும் புவிபதித்து ஒருமுழுந்தாள்
    இருத்தியொரு தாள்மே னிமிர்ந்து
இந்த்ரதிரு விற்கிடை தொடுத்தவெண்
    தரளநிரை யேய்ப்பநுதல் வேர்பொடிப்ப
திருமுகம் நிமிர்த்தொரு குழந்தை யமுதாம்பிகை
    செங்கீரை யாடியருளே

எனவரும் அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்-செங்கீரைப் பருவம் (1) அடிகளும் ஆகும். மதுரைத் தமிழ்ச்சங்க அகராதி 'ஐந்து மாதக்குழந்தை இருகையும் முழுந்தாள்களும் ஊன்றித் தலை நிமிர்த்திட்டு ஆடுதல்' என்று விளக்கந்தருகிறது. இவ்விரண்டில் ஒன்றை ஏற்கலாம்.

தவழும் குழந்தை முதலில் பேசக் கேட்கவே தாய் விரும்புவாள். அதனால், சிலம்பு-துன்பமாலையில் வரும் "சொல்லாடும் சொல்லாடும் தான்" என்பதற்கு அரும்பத உரையாசிரியர், சொல்லாடும் - சொல்லுதலைச் செய்யும் என்று பொருள் கூறியதுபோல் செங்கீரையாடியருள் செவ்விய சொற்களைச் செய்து (சொல்லி) அருள் என்று பொருள் கொள்ளுதலே சரி என்று நினைக்கிறேன். அறிஞர்கள் மேலும் ஆராயலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# கொடுத்தபடி தொடுத்த பாடல்கள்

## வஞ்சித்துறை-7

புளிமா + புளிமாங்காய்

தமிழே! சுவையூட்டும்
அமிழ்த மொழியன்றோ!
கமழும் செழுந்தேனே!
தமிழர் உயிரன்றோ!
1. - கவிஞர் தே. சனார்த்தனன், முதலியார்பேட்டை.

பழகு தமிழ்போலே
அழகு மொழியுண்டோ?
உழவு செழித்தாலே
நிழலும் மகிழாதோ?
2. - பாவலர் கி. பாரதிதாசன், பிரான்சு.

பணத்தைப் பெரிதாக
மனத்தைச் சிறிதாக
இனத்தை இழிவாக
நினைத்தல் தமிழ்ப்பண்போ?
3. - பாவலர் வே. முத்தையன், முத்தியால்பேட்டை.

தமிழின் உயர்வாலே
தமிழர் உயர்வாரே!
தமிழா முயல்வாய்நீ
தமிழைப் புகழ்தற்கே!
4. - இசைவாணர் எ.சிவாநந்தம், பாசூர்.

அருமைத் தமிழன்னை
பெருமை அறியாத
ஒருவன் தமிழன்கொல்?
எருமை அவன்என்பேன்!
5. - வழக்குரைஞர். கோ. நடராசன், புதுச்சேரி.

அரிய தமிழுக்கே
உரிய சிறப்பைத்தான்
சரியாய்த் தருவோர்தாம்
பெரிய மனத்தோரே!
6. - ந. திருவள்ளுவன், அமெரிக்கா.

முயன்று தமிழ்வாழ
இயன்ற தனைத்தும்நாம்
செயலில் இணைந்தொன்றாய்த்
தயங்கா துழைப்போமே!
7. - கோ. இராசேசுவரி, புதுச்சேரி.

அருளைப் பெறவும்நற்
பொருளைப் பெறவும்தீ
இருளை அகற்றின்பந்
தருவ தறந்தானே!
8.- புலவர். செ. இராமலிங்கன், புதுவை.

அடடா தமிழாநீ
வடவோர்க்(கு) அடியாளா?
மடவார்ப் பொறையேனோ?
எடடா நலச்செய்கை!
9. - மருதநாடன், கோவை.

உலகில் பலர்போற்ற
நிலவி அழியாமல்
இலகும் தமிழேதான்
திலகம் எனவாகும்.
10.- புலவர் வேங்கடராசன், திருவரங்கம்.

செழுமை மொழியென்னும்
விழுமை உணர்வாலெம்
முழுமை நெறிவாழ்வு
வழுவா மணமேயாம்!
11. - தி.ப. சண்முகம், திருக்காடுதுறை.

முதலில் முளைவிட்டு
முதலில் கிளைநீட்டி
முதலின் முதலாகி
முதலாம் தமிழ்தானே!
12. - கொட்டப்பட்டு, ப. சக்திவேலன், திருச்சி.

ஒருநாள் தமிழ்நாடும்
உருவாம்! தமிழர்க்கோர்
திருநாள் அதுதானே!
வருநாள் மகிழ்வோமே!
13.- பொறிஞர் கு.ம. சுப்பிரமணியன், திருச்சி.

உலகின் திசையெங்கும்
பலவாய்த் திகழ்ந்தோங்கும்
குலங்கள் மொழியாவும்
இலங்கு தமிழ்ச்சேயே!
14. - பொறிஞர் இ. அகன், திருச்சி.

www.padippakam.com



பயிற்சி மொழியாக்க
முயற்சி எடுத்திட்டால்
உயர்ச்சி வருமேடா
அயர்ச்சி இனிவேண்டா!
15. - பெ. சயராமன், இலால்குடி.

அறநூல் குறள்தந்து
புறத்தை உயர்த்திட்ட
திறத்தை உலகேத்தும்
சிறப்பும் தமிழ்க்குண்டு.
16.- புலவர். அ. பக்கிரிசாமி, திருநள்ளாறு.

கடலில் கவிழ்ந்தாலும்
சுடரில் சுருண்டாலும்
இடரில் இளைத்தாலும்
தடத்தில் தமிழ்த்தாயே!
17.- வே.இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

வினையில் விருப்புண்டேல்
அனைத்தும் அருகாகும்;
வினையில் விருப்பின்றேல்
நினைக்க நினதூழாம்.
18. - புலவர் த. தட்சணாமூர்த்தி, தி.பட்டினம்.

அருமைத் தமிழால்நற்
பொருளை உரைத்திட்ட
பெருமை தரவல்ல
குருவின் வழிநிற்போம்.
19. - அ. சுசீலா, ஆனந்தாநகர்.

அருண கிரிபாடல்
நெருடல் உளயாப்பே
தெரியு மிதுவண்ணம்
வரையும் புலவர்க்கே
20. - மு. இராமகனகராசன், புதுவை.

அயற்சொல் களைந்திங்கே
உயர்வாம் தமிழால்நல்
இயக்கம் சிறப்பெய்த
தயக்கம் தகுமாமோ?
21.- இரா. அருணாசலம், ஆனந்தா நகர்.

உலக மொழியெல்லாம்
உலப்பு மொழியாகும்!
நலமாம் தமிழொன்றே
இலங்கு மொழியாகும்.
22.- புலவர் அ. தங்கவேலு, மணலூர்ப்பேட்டை.

அமிழ்தாம் தமிழ்ச்சொற்கள்
அமைவாய் உரைவாயால்
தமிழல் பிறசொல்லை
உமியாய்ப் புறந்தள்ளு.
23. - துரை. தொல்காப்பியன், பள்ளிகொண்டாபுரம்.

கனிகொள் சுவையாவும்
இனிதாம் தமிழென்போம்
மணிகொள் ஒலியெல்லாம்
அணிகொள் தமிழன்றோ!
24.- இள. துரைக்கண்ணன், வளவனூர்.

“புகழும், புகல்வேண்டின்,
இகலிவ் விழிந்தோர்க்கே,
திகழும் தடந்தோளர்
அகழ்க பெரும்பள்ளம்.”
25. - வில்லியன், புதுவை.

வலையிற் படுமீனே
உலையிற் படுநீரே
அலையிற் படுபூவே
தொலையிற் படுநெஞ்சே.
26. - வே.ச. திருமாவளவன், புதுவை.

கனிவு நிறைந்திங்கே
தனிமை நிலையோடே
கனியின் சுவைசேர்ந்த
இனிமைத் தமிழ்தானே!
27. - சிவ. கணபதி, புதுச்சேரி.

அரும்பாய் உதிக்கின்ற
கரும்பாய் இனிக்கின்ற
விரும்பும் வகையாகும்
பெருந்தாய் தமிழாகும்!
28. - சிவ. அருள்மணி, திருக்கழுக்குன்றம்.

கனித் தமிழென்னும்
திணிநல் லறிவார்வோம்
கணியம் வெறுத்திங்கே
அணிவம் அறிவாய்வே.
29. - ப. மங்கையர்க்கரசி, புதுவை.

இனிய ஒலியோடும்
தனிமை எழுத்தோடும்
கனிபோல் கருத்தேற்ற
நனிசொல் தமிழ்வாழ்க!
30. - பாவலர். கதிர். முத்தையன், கடலூர்.

www.padippakam.com



உனையே பெரிதாக
நினைந்தே செயவேண்டா
மனையா ளுரைகேட்டால்
இனிதே முடிவாகும்!
31.- அரிமா. இளங்கண்ணன், சென்னை.

தமிழைப் படிப்பாயே
தமிழைச் சுவைப்பாயே
தமிழை நினைப்பாயே
தமிழை வளர்ப்பாயே!
32. - வெள்ளம்பாக்கம் ம. கேசவன்.

சுவடி படியாதான்
புவியில் தடுமாறித்
தவிப்பான்; பணங்காசு
குவித்துப் பயனென்ன?
33. - கவிஞர் பாலசந்திரன் சேகபு, வேலூர்.

தமிழே பயிலாமல்
தமிழில் எழுதாமல்
தமிழின் நினைவற்றே
தமிழன் வளர்கின்றான்.
34. - சீ. பெ. முத்துக்குமரன், கோவை.

இலக்கி யவளஞ்சேர்
இலக்க ணவாழ்வுற்ற
குலக்கொ டியாமெங்கள்
துலக்கத் தமிழ்த்தாயே!
35. - சிவ. கலைவாழி, பாகூர்

வழுமை இலாதென்றும்
விழுமைப் புகழ்வாய்ந்த
முழுமை மொழிஎங்கள்
செழுமைத் தமிழ்வாழ்க!
36. - பாவலர் கோவி. தமிழ்நாடன், அரியாங்குப்பம்.

கறையில் தமிழ்ச்சங்கம்
மறைவல் புலவர்கள்
மறஞ்சொல் திறன்மள்ளர்
குறையில் தமிழ்காப்பர்!
37. - முனைவர் குருசாமி சித்தர், கோவை.

இசையாம் தமிழ்ஒன்றைப்
பசையாய்ப் பெறுவீரேல்
நசையோ டினிதான
வசையில் வளவாழ்வாம்
38. - மாணவி மு. சக்தி, மயிலம்.

உரத்தை உரைக்கும்சீர்
தரத்தை உயர்த்தும்பார்
உருத்தல் விளைக்கும்தோ்
திரத்த தமிழே! ஆம்!
39.- புலவர் இரா. தமிழாளன், முள்ளோடை.

நிலவின் அழகெல்லாம்
ஒளிரும் அலைநீரில்!
ஒலியின் சிறப்பெல்லாம்
உலவும் தமிழ்ச்சொல்லில்!
40. - மணிமேகலை குப்புசாமி, புதுவை.

அகத்தில் பகையோடும்
முகத்தில் நகையோடும்
புகழும் நடிப்போடும்
திகழ்வோர் மிகுந்தாரே!
41. - பாவலர் கருமலைத் தமிழாழன், ஒசூர்.

உளநூல் வழிவேர்ச்சொல்
விளங்கும் விதிநூல்கள்
உளதாம் மொழியொன்றே
விளம்பு தமிழென்றே
42. - தி. பக்கிரிசாமி, தி.பட்டினம்.

பிழைகள் அகன்றென்றும்
மழைபோல் நயனீன்று
தழைக்க இருள்நீங்க
உழைத்தார் பெரியாரே!
43. - மு. தமிழ் நிலவன், புதுவை.

உலகம் உயர்ந்தோங்க
வளஞ்செய் குறள்தந்த
இளமைத் தமிழ்போல
வளரும் மொழியுண்டோ?
44. - கவிஞர் து. சுப்பராயலு, பெரியகுளம்.

கனவில் வருவாளே!
நினைவில் நிறைவாளே!
எனைநல் லறிவாக்கி
இனிதாய் அருள்தாயே!
45. - கவிஞர் பெ. அறிவழகன், சின்ன சேலம்.

இழிவே இலைஎன்போர்
மொழியே அனைத்திற்கும்
வழியே எனத்தம்மின்
பழியைத் துடைப்பாரே!
46. - அரு. மணிவாசகன், திருமருகல்.

www.padippakam.com



சிறந்த மொழிதன்னில்
இறவா நிலைகொண்டே
திறமாய் இருக்கின்றாய்!
மறவேன் தமிழ்த்தாயை!
47. - க. சண்முக சிதம்பரம், தரகம்பட்டி.

உடலை வெளிக்காட்டும்
நடிகை முகங்காட்டும்
படங்கள் வெளியாக
இடம்நாம் தரலாமா?
48. - பாச்சுடர் வளவ. துரையன், கடலூர்.

உலகில் உயர்வாகும்
அலகில் அழகாகும்
மலரில் மணமாகும்
நலமார் தமிழாகும்!
49. - வே. இராசவேலன், வாழியூர்.

அழகு நிறத்தாலா?
அழகு முடியாலா?
அழகு நகையாலா?
அழகே அறிவால்தான்.
50. - தருமலிங்கம், புதுவை.

பழகுந் தமிழோங்க
மழலை யிலேவூட்டு!
முழக்குத் தமிழ்ப்பண்பை
இழத்தல் கொடிதேயாம்!
51. - புலவர் கோ. தனபாலன்.

சிறவாத் தமிழ்மாந்தர்
பிறர்தாள் இணைபோற்றி
உறவார் பகைதோற்றி
உறுவார் பெருஞ்சீர்த்தி!
52. - மு.வே. கங்காதரன், சென்னை.

கதண்டாய் நிதம்நீயும்
மதுவைக் குடித்திட்டால்
உதப்பி கெடலுற்றே
இதரம் அடைவாயே!
53. - மு.குழ. மூர்த்தி, வே.பாளையம்.

தமிழுக் கமுதென்பர்
அமிழ்தின் சுவையெல்லாம்
குமுத முகத்தாளின்
உமிழும் நகையாமோ!
54. - ஆறு. அரங்கண்ணல், புதுவை.

திறத்தைத் தெளிப்பாரும்
மறத்தை மதிப்பாரும்
நிறத்தை நிறுவத்தான்
கறங்கிக் கிளர்ந்திட்டார்
55. - புலவர் த. ஆறுமுகன், வில்லிவாக்கம்.

மலர்கள் பலகொண்டு
பலபேர் தொழுதார்கள்!
மலரே அவரென்று
சிலரே தெரிந்துள்ளார்!
56. - அ.மா. கந்தசாமி, அன்பில்.

தமிழைப் பயிலாதான்
தமிழன் எனமாட்டான்
தமிழைப் படிக்காமல்
தமிழன் உயர்வானோ!
57. - மா. ப. சகந்நாதன், சென்னை.

நதியின் கரையில்தான்
உதித்தல் மறந்தீரே!
கதிரைக் கருவாக்கக்
கதிராய் வருவீரே!
58. - க. கண்ணன், திருச்சிராப்பள்ளி.

அருமைத் தமிழென்றும்
பெருமை பெறுதல்தான்
இருமை யுலகின்கண்
ஒருமை யெனச்சொல்லே!
59. - ச. திருநாசுக்கரசு, திருச்சி.

நிறைந்த உலகத்தே
செறிந்த கருத்தெல்லாம்
சிறந்த தமிழில் தான்
அறிந்தார் குறைந்தாரோ!
60. - சா. சம்பத்து, பெருமாங்குப்பம்.

இறைவன் பலவாறு
துறைகள் அதில்வேறு!
இறையும் அவன்தானே
முறையாய்த் தருவானே!
61. - அ.க. கண்ணதாசன், திருச்சிராப்பள்ளி.

கடலின் அலைகொண்டும்
விடலின் அலைதின்றும்
திடமாய் இருக்கின்றாய்
மடலின் தமிழ்த்தாயே!
62.- புலவர் அ. பொன்னையன், புலிகரம்பலூர்.

www.padippakam.com



புனலின் விரைவோடே
கனியின் சுவைகூட்டி
இனிய தமிழ்ப்பாடல்
புனைந்து மகிழ்வோமே!
63. - அதலை இராமன், மதுரை.

'பகுத்துண்' தமிழ்மண்போல்
தொகுத்த தமிழே போல்
வகுத்த மொழிவாழ்க!
மிகுத்த வழிகாண்போம்!
64. - ஆ. கோவிந்தராசலு, கரிக்கலாம்பாக்கம்.

எதுகைத் தமிழ்ப்பாட்டு
மதுவின் சுவையூட்டும்!
புதுவைக் கவிப்பாட்டன்
புதுமை அவைகாட்டும்!
65. - குலூர் கலைப்பித்தன், கோவை.

தமிழ்த்தேன் சுவைக்காமல்
உமிபோல் செயல்தன்னில்
அமிழ்ந்தே வறிதாகத்
தமிழர் கெடல்நன்றோ!
66. - பாவலர் ஆ. வே. இராமசாமி, திருச்சி.

அயலார் மொழிதன்னை
உயர்வாய் நினைத்தென்றும்
மயர்வில் திளைக்காதே
உயர்வாம் தமிழோதல்!
67. - புலவர் அரங்க. சேசாசலம், புதுவை.

விளையும் பொருளெல்லாம்
நிலையாய் விளைவிப்போம்
குலையாத் தமிழ்தன்னை
நிலையாய் வளர்ப்போமே!
68. - இரா. இ. அரங்கசாமி, தங்கவயல்.

அகன்ற உலகத்தில்
நிகரில் குறளோடு
திகழும் மனங்கொண்டால்,
புகழ்பெற் றுயர்வோம் யாம்
69. - கு. அம்மச்சி, மயிலம்.

இனிய தமிழ்தன்னில்
இனிமை பயக்கும்நல்
நனியக் கருத்துக்கள்
கனியும் குறள்கண்டேன்!
70. - பெ. கு. தனலட்சுமி, மயிலம்.

குருவ டிபணிந்தும்
திருவ டிநினைந்தும்
அருளும் மொழிபேணிப்
பெரும்பே றடைவீரே!
71. - கி. ஜெயா, வள்ளலார் நகர்.

விழியிற் கிணையாம்உன்
மொழியாம் தமிழ்காத்தே
எழிலாம் அறத்தைஉன்
அழியா உணர்வாக்கு!
72. - கி. பிரபு, புதுச்சேரி.

அழிவை அழித்தேதான்
செழிப்பாய்க் கொழித்தல்பார்
விழியின் ஒளியாய்த்தான்
மொழியும் தமிழ்தான்சீர்
73.- து. ஆதிநாராயணமூர்த்தி, பரதராமி.

களங்கள் பலகண்டும்
இளமை தினங்குன்றா
வளமைத் தமிழ்க்கீடாய்
உலகில் மொழியேது?
74. - ச.ந. இளங்குமரன், நாகலாபுரம்.

தமிழில் எதையும்எண்
தமிழில் எதையும்சொல்
தமிழில் எதையும்செய்
தமிழால் தனித்தேஉய்
75. - துரை. மூர்த்தி, ஆர்க்காடு.

உலவும் நிலவன்றோ
நிலவின் ஒளியன்றோ
மலரின் மணமன்றோ
மலரும் கவியன்றோ!
76. - வே. முத்துலக்குமி, திருச்சிராப்பள்ளி.

வளமார் வனப்பாளும்
இளமார் இனிப்பாக
களமாய் நிலைகொண்ட
உளமார் தமிழொன்றே.
77. - நின்ற வண்ணன், புதுச்சேரி.

இணைந்து திரண்டோடும்
அணைநீர் திறப்பைப்போல்
அணையா விளக்கான
இணையில் தமிழ்காக்க!
78. - புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

படிப்பகம்

www.padippakam.com



தமிழே மொழிமுன்மை!
தமிழே மொழிச்செம்மை!
தமிழே தனிவாழும்!
தமிழே இனிதாகும்!
79. - தா. அன்புவாணன் வெற்றிச்செல்வி, காஞ்சிபுரம்.

கதிரை அறுப்போர்தம்
உதிரம் வடிதல்பார்!
எதிர்வந் திடும்காலம்
புதிர்போல் புரியாதே!
80. - மாணிக்கப்பாவை, உத்திரமேரூர்.

நினைவில் உருவாகும்
கணைகள் பெருக்கோட
மனையின் நலன்காத்த
முனைவன் அடியேனே.
81. - இடிமுரசார், சென்னை.

தமிழ்வாழ்ந் திடவாழ்வோம்!
தமிழ்தாழ்ந் திடின்வீழ்வோம்!
தமிழ்த்தாய் மகனே! நாம்
தமிழ்காத் திடுவோம்! வா!
82. - மு. குழந்தை, கரூர்.

தமிழே உயிரென்போம்
தமிழே உணர்வென்போம்
தமிழே உயர்வென்போம்
தமிழே உறவாமே!
83. - வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

எழுதும் பொழுதொன்றும்
மொழியும் பொழுதொன்றும்
ஒலிகொள் மொழியில்லா
மொழிசெந் தமிழன்றோ?
84. - மு. சீனுவாசன், திண்டுக்கல்.

சிறப்பு ழறஎன்னும்
சிறந்த ஒலிதுள்ளும்
ரறழ ளலஎன்று
பிறக்கும் இசைநன்று
85. - மணிமொழியார், பொள்ளாச்சி.

உருளும் உலகத்தில்
அருளும் உளங்கொண்டார்
தெருளார் வறுமைக்கும்
மருளார் பகைமைக்கும்
86. - சா. கண்ணன், புதுச்சேரி.

விளைவில் அமுதாகும்
சுளையில் சுவையாகும்
முளைநெல் வளமாகும்
களையில் தமிழ்தானே!
87.- உலோ. சுப்பிரமணியன், சென்னை.

நிலத்தின் களைநீக்கிப்
பலனை யடைவாயே
கலப்புத் தமிழ்நீக்கி
நலத்தைத் தருவாயே!
88. - வீ. வில்வநாதன், பெங்களூர்.

உலகின் மொழிக்கெல்லாம்
திலகம் தமிழன்றோ!
நிலத்தில் நிலைத்தோங்க
விலக்கே அயலார்சொல்.
89. - த. குமாரசாமி எசுதர், கருவூர்.

புகழில் நிறைந்திட்ட
நிகரல் தமிழ்த்தாயின்
முகத்தில் விழித்திட்டே
சிகரம் பிடித்திட்டோம்!
90. - க. அன்புக்கோகிலா, மயிலம்.

இமைகள் செயல்போலத்
தமிழின் நலம்பேணச்
சுமைகள் கருதாமல்
அமைவுப் பணிசெய்வோம்!
91. - நாவை. சிவம், மணற்பாறை.

பழமை மொழிகட்குள்
பழமை உடையாள்யார்?
அழகும் வளம்யாவும்
தழுவும் தமிழ்த்தாயே!
92. - கூத்தரசன், புதுவை.

அதிகம் வரவுண்டேல்
அதிகம் செலவுண்டாம்;
எதுநம் வருமானம்
அதுகொண் டுவப்போமே!
93.- புலவர் கி. சிவக்குமார், தி.கொ.அ.கல்லூரி.

இறைவர் அருளாலும்
திறமைத் துணைகொண்டும்
அறிவில் சிறந்தோரே
அறிஞர் பெருமக்கள்.
94. - த. கணபதி, தி.கொ.அ.கல்லூரி.

படிப்பகம்

www.padippakam.com



கலகம் பிறந்தாலே
குலங்கள் அழிதல்பார்
குலங்கள் அழிந்தாலோ
உலகம் கிடையாதே.
95. - த. தனலட்சுமி, தி.கொ.அ.கல்லூரி.

பணமோ உலகத்தில்
இனமோ புருவத்தில்
குணமோ குழப்பத்தில்
மனமோ புழுக்கத்தில்
96. - கு. செந்தில், தி.கொ.அ.கல்லூரி.

கரும்பின் சுவையாலும்
இரும்பின் வலிவாலும்
அரும்பு மணத்தாலும்
விரும்பும் மனிதர்கள்.
97. - கு. கதிரேசன், தி.கொ.அ.கல்லூரி.

விதியே உலகென்று
கதியாய்க் கிடக்காதே
புதிதாய் உலகத்தை
மதியால் உருவாக்கு.
98. - க. கமலகாசன், தி.கொ.அ.கல்லூரி.

பழகச் சிறப்பாகும்
வழக்கில் நலஞ்சேர்க்கும்
கழகம் வளர்த்திட்ட
அழகு தமிழ்தானே!
99. - த. கோபால், தி.கொ.அ.கல்லூரி.

மழைநீர் தொகுப்போமேல்
பிழைப்பு நலமாகும்
இழைக்கும் புனலின்மை
தழைக்கா தகலும்காண்!
100.- கோ. இரகுராமன், தி.கொ.அ.கல்லூரி.

மலைகள் பொடிந்தாலும்
தலைகள் உருண்டாலும்
கலைகள் மறைந்தாலும்
விலைகள் குறையாவே!
101.- ச. அருள் நேரு, தி.கொ.அ.கல்லூரி.

தடையில் செயல்கள்தாம்
நடையில் குறைநீக்கும்
படையில் மறவர்கள்
விடைபோல் நடப்பார்கள்!
102. - பா. சாந்தி, தி.கொ.அ.கல்லூரி.

அமிழ்தாய்த் திகழ்கின்ற
தமிழைப் பயிலாமல்
உமிபோல் பிறகற்றுத்
திமிராய்த் திரிகின்றார்.
103. - கே. வீரமுத்து, தி.கொ.அ.கல்லூரி.

முயன்று படித்தால்நாம்
உயர்ந்தே இருப்போம்காண்
அயர்ந்து மனம்நொந்தால்
வியந்து புகழ்வாரோ?
104.- பெ. திலகவதி, தி.கொ.அ.கல்லூரி.

வெள்ளைப் புறாப்போல
உள்ளம் நிறைவுற்றால்
கள்ளம் அமையாத
நல்ல உலகுண்டாம்.
105.- அ. பிரபாமேரி, தி.கொ.அ.கல்லூரி.

கனிவாய் இருந்தால்தான்
இனிமை வரக்கூடும்!
துணிவாய் இருந்தாலும்
பணிவும் துணையாகும்!
106. - அ. சுந்தரி, தி.கொ.அ.கல்லூரி.

படிப்பில் தமிழன்நான்
நடிப்பில் கலைஞன்நான்
துடிப்பில் இளைஞன்நான்
முடிவில் மனிதன்நான்.
107. - அ. சாம்சன், தி.கொ.அ.கல்லூரி.

மனதில் நினைக்கின்றேன்
கனவில் வருகின்றாய்
கனவே மறைந்தாலும்
எனக்குள் இருக்கின்றாய்!
108. - செ. சிவக்குமார், கத்தாழை.

தமிழைப் படிக்கும்முன்
அமிழ்தச் சுவைகாணேன்
தமிழைப் படித்தேதான்
அமிழ்தச் சுவைகண்டேன்.
109. - தி. விசயசாரதி, க. புத்தூர்.

திருந்து குடிக்காமல்!
மருந்தே உனக்காக
விருந்தாய் உருவாகும்!
வருந்தி அழியாதே!
110. - க. கண்ணதாசன், சேத்தியாத்தோப்பு.

www.padippakam.com



இனிமை உலகத்தில்
மனிதன் உருவாகத்
தனிமைத் துணைவேண்டா
மனமே தெளிவானால்.
**111.- செ. மணிமாறன், கோ. மாவிடந்தல்.**

அரும்பின் அவிழ்வொன்றை
கரும்பின் இனிப்பொன்றை
விரும்பி மகிழ்வெய்த
வருமே நலவாழ்வு!
**112. - அ. கரோலின், தி.கொ.அ.கல்லூரி.**

குணமே பணமாகிப்
பணமே சுமையாகி
மனமே கனமானால்
இனமே வனமாகும்.
**113. - கா. கவிதா, தி.கொ.அ.கல்லூரி.**

அருளாய் வருவோனே
திருவாய் நினைத்துன்னைக்
குருவாய் மனம்நாடி
வருமே தினந்தோறும்.
**114.- வே. புவனேசுவரி, தி.கொ.அ.கல்லூரி.**

கனிவில் மிகுந்தாய்நீ
பணிவில் சிறந்தாய்நீ
துணிவை வளர்த்தாய்நீ
அணிசேர் தமிழ்த்தாயே!
**115. - செ. கல்பனா, தி.கொ.அ.கல்லூரி.**

கருவில் உருப்பெற்றே
தெருவில் இருக்கின்றாய்
அருகில் இரப்போரே
கருகும் மனிதம்தான்!
**116.- இரா. விட்ணுப்பிரியா, தி.கொ.அ.கல்லூரி.**

பணம திருந்தாலென்
குணம திலார்தம்மை
மணம திலாப்பூவாய்க்
கணமும் மதியாரே!
**117. - இரா. அனுராதா, தி.கொ.அ.கல்லூரி.**

கடலின் அலைபோலே
திடலில் தலைகண்டேன்
உடலால் பலரானார்
நடப்பால் திருவானார்.
**118.- கோ. அருளரசி, தி.கொ.அ.கல்லூரி.**

உலகில் கொடைப்பாரி
நிலைபோல் அறியேன் நான்
உலகைப் புரக்கின்ற
நலஞ்சேர் மழைபின்பே!
**119.- சத்தியப்பிரியா, தி.கொ.அ.கல்லூரி.**

படிப்பே இசையானால்
துடிப்பு விளைவாகும்!
நடிப்பு விடிவானால்
முடிப்புத் தெளிவாகும்!
**120. - ச. சுந்தரி, தி.கொ.அ.கல்லூரி.**

உயர்ந்த உணர்வெல்லாம்
இயைந்து கவிசெய்தால்
நயந்து பலபேரும்
இயல்பாய்ப் புகழ்வாரே.
**121. - இசையமுது, தி.கொ.அ.கல்லூரி.**

அலையாய் வருகின்றான்
சுளையாய் இனிக்கின்றான்
கலையாய்த் தெரிகின்றான்
விலையில் அறிவாளன்.
**122. - செந்தில்குமார், தி.கொ.அ.கல்லூரி.**

புவியில் திருவோங்கக்
கவிதை நலமோங்கச்
செவியில் கொடுத்திட்டால்
கவிஞர் பதிநீயே!
**123.- க. புவனேசுவரி, தி.கொ.அ.கல்லூரி.**

மதியில் கொடிநட்டு
மதிப்பில் உயர்ந்தாய்நீ
பதிப்பாய் தமிழ்ஏட்டை!
துதிப்பாய் தமிழ்நாட்டை!
**124.- இ. காசிலிங்கம், தி.கொ.அ.கல்லூரி.**

தமிழ னெனச்சொல்வாய்!
தமிழ னெனஆள்வாய்!
தமிழன் இனமேசொல்
தமிழைப் படித்தேவெல்!
**125.- பூபதிகாசிலிங்கம், தி.கொ.அ.கல்லூரி.**

செருக்குப் பல கொண்டே
இருக்கும் மனத்திற்கு
நெருப்பாய்ச் சுடுகின்ற
திருக்கு றளேவாழ்க!
**126. - க. சக்திவேல், தி.கொ.அ.கல்லூரி.**

www.padippakam.com



மதிபோல் நிறங்கொண்டு
நதிபோல் வளஞ்கொண்டே
அதிகம் வலுகொண்ட
பதிகத் தமிழ் வாழ்க!
127. - த. மணிகண்டன், தி.கொ.அ.கல்லூரி.

பிறப்பு நிலையில்லை
இறப்பு வரலுண்மை
துறவு மனம்கொண்டே
அறம்நீ புரிநன்றே!
128. - தி. உருபன், தி.கொ.அ.கல்லூரி.

பெருமை பெறவேநாம்
அருமைத் தமிழ்கற்போம்
செருக்கிங்(கு) அழித்திட்டால்
ஒருமை யினராவோம்.
129. - சா. சாகிதா, தி.கொ.அ.கல்லூரி.

வளமை மிகுசொல்லை
உளம தனில்கொண்டு
விளக்கம் நனிபெற்றேன்
விளக்கெ னஒளிர்ந்தேன்!
130. - கி.ச. புனிதவதி, பெ.கா.அ.க.கல்லூரி.

இனிமைப் பொருளாகும்
கனிந்த தமிழோசை
தனித்த தமிழ்பேச
மனிதன் உருவாவான்!
131. - ஞா. விசயகுமாரி, மயிலம்.

மொழியே விழியாகும்
விழியே தமிழாகும்
பொழியும் அமுதாகும்
அழியாத் தமிழன்றோ?
132. - இதயகீதன், தேனி.

அழகும் தமிழென்பேன்
மழையும் தமிழென்பேன்
உழைப்பும் தமிழென்பேன்
செழிப்பும் தமிழென்பேன்.
133. - வ.இர. புதியபரிதி, தேனி.

சிறந்த புலவர்தான்
அறமே பொருளென்று
சிறந்த கருத்தைத்தான்
புறத்தில் உரைத்துள்ளார்.
134. - ந. சித்திரா.

நிலவின் ஒளியாலே
பொலிவு மிகுந்தாடும்
உலவு நிறைவானில்
அலகில் அழகன்றோ!
135. - கவிஞர் சசி, தோக்கவாடி.

இறைவன் இருந்திட்டால்
முறைமை பிழைத்தோரைக்
குறைவு பெறச்செய்து
குறைதல் பெறுதல்நேர்!
136.- புலவர். அய்யா. மோகன், கல்லக்குறிச்சி.

இழிவுப் பிறப்பாளர்
அழிவுச் செயலாளர்
எழினி யெனக்காட்டிப்
பழியோ பலசெய்தார்.
137. - தமிழடுக்கம், கல்லக்குறிச்சி.

தவற்றில் தலையானோர்
தவற்றைப் புரியாரை
இவவுக் குடையாராய்க்
கவலல் படச்செய்தார்.
138. - தமிழோங்கல், கல்லக்குறிச்சி.

நினைவில் நமதன்னை
உணர்விற் குரமாவார்
சினமே மிகுந்தாரைப்
பனியாய்க் குளிர்விப்பாள்.
139. - அ.க. நடராசன், சென்னை.

தகைசால் தமிழுக்குப்
பகையாய் மொழிகள் பல்
வகையாய் வளர்ந்தாலும்
மிகையாம் தெளிதேனே!
140.- இரா. நலத்திரு, திருச்சிற்றம்பலம்.

எதுகை எழில்மோனை
பொதிகை மலையல்ல!
புதுமை விளைத்திட்டால்
எதனால் தமிழ்வீழும்?
141. - இ. தாவிது பிரபாகர், புதுவை.

எழுமின் இளைஞர்காள்!
விழிநம் தமிழிங்கே
மொழிசெம் மொழியென்றே
வழியும் பெறற்கின்றே!
142. - கோவி. கலியபெருமாள், புதுவை.

www.padippakam.com



தயக்கம் இனியும்ஏன்
அயர்வைக் களைந்திட்டு
நயமாய் உழைத்திட்டால்
உயர்வர் தமிழ்மக்கள்!
143. - வ. பழனி, புதுவை.

குழலின் இசையும்நல்
உழவின் சிறப்பும்தேன்
பழத்தை விடவும்பேர்
அழகாம் தமிழ்வாழ்க!
144. - பிரியா ஆனந்து, புதுவை.

கனிந்த மனத்திற்கு
முனிவர் தருகின்ற
இனிக்கும் கருத்தைப்போல்
நனிசீர் தமிழ்வாழ்க!
145. - கவிதா சுப்பிரமணியன், புதுவை.

வறுமை ஒழியாதோ!
சிறுமை அழியாதோ!
வெறுமை கழியாதோ!
நறுமை செழிக்காதோ!
146. - கோ. வெற்றிச்செல்வி, சென்னை.

கனியாம் தமிழ்கண்டோம்
பிணியாம் மொழியேனோ?
மணியாய் அதைக்கற்றால்
இனிதாம் வழியாமே.
147.- கோ. ஆனந்தகிருட்டினன், திரு. பட்டினம்.

மொழிகள் பலவுள்ளும்
விழிகள் எனக்கொள்ளும்
எழிலார் திறங்கொண்ட
மொழிதான் தமிழன்றோ?
148. - ப. இரவி, திரு. பட்டினம்.

தருக்கர் மொழிபேணார்
செருக்கில் அவர்வாழ்வார்
நெருக்கம் பொருளொன்றே
பெருக்கி உயர்வாரே!
149. - இரா. அருமருந்தலைவன், திருமருகல்.

கலைகள் பலகொண்டு
சிலைகள் பலசெய்து
விலைகள் பெருக்காமல்
தலைகள் நிமிர்வோமா!
150. - சா. அமிதா, தி.கொ.அ.கல்லூரி.

சிறையிற் கிடந்தாலும்
முறையாய்த் தமிழ்எண்ணும்
கறைதீர் உளத்தாலே
உறையும் தமிழ்ப்பண்பே!
151. - நா. தண்டபாணி, அம்பல்.

அமுதே! தெளிதேனே!
அமைவே! அருட்பேறே!
சமைந்த தமிழ்ச்சாறே!
இமைக்குள் ளிருந்தேனோ?
152. - வானவன், வெங்காலூர்.

வளமை நலம்சார்ந்தும்
இளமை எழில் கொண்டும்
உளமே நிறைந்தென்றும்
விளங்கும் தமிழ்த்தாயே!
153. - முனைவர் கடவூர்மணிமாறன், கி.புரம்.

கனியின் சுவைமிக்க
தனிநற் றமிழெங்கள்
முனிந்து மொழிந்தாலும்
இனிக்கும் தமிழ்தானே!
154. - கோ. இளங்கோபாண்டியன், புதுவை.

தனியார் முதலீடே
இனிதாய் இருந்தாலும்
பனிபோல் கொடுவெம்மை
இனிதான் புலனாமே!
154. - த. முத்தமிழ், தருமபுரம்.

## பாடல் படைத்திடுக
### வஞ்சித்துறை - 7

**கூவிளங்கனி + விளம்**

மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்!

(காரிகை சான்று பாடல்)

1. ஓரடியில் இரண்டு சீர்கள் இருக்க வேண்டும். 2. ஓரடியின் சீரமைப்பு முறையே : கூவிளங்கனி+விளம் 3.இவ்வாறு நான்கடிகள் ஓரெதுகை பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறமைந்த பாடல் ஒன்றை இக்கால நிகழ் பொருள் ஒன்றின் கருத்தமைய இயற்றி 29-02-04க் குள் விடுக்க.

- புலவர் அரங்க. நடராசன்.

www.padippakam.com



# செந்தமிழ் வளர்க்கும் செய்திகள்

❖ **பிரான்சில் கம்பன் விழா :** 20, 21-12-03 ஆகிய இரு நாள்கள், கம்பன் விழா தொடக்க நிகழ்வு, தனியுரை, ஒப்புரை, எழிலுரை, தேனுரை, சுழலும் சொற்போர், பட்டிமன்றம், பாட்டரங்கம், வழக்காடு மன்றம் என நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. தமிழகத்திலிருந்து தமிழறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர். புதுச்சேரியிலிருந்து நற்றமிழன்பர்கள் கம்பன் கழகச் செயலாளர் வழக்குரைஞர் தி. முருகேசனாரும், திரு கி. கலியாணசுந்தரமும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. விழா ஏற்பாடுகளைப் பாவலர் கி. பாரதிதாசனாரும் அவரின் நண்பரும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

❖ மியான்மர் யாங்கோனில் 4-1-04 இல் அண்ணல் காந்தியார் அரங்கில் இசைவிழா, தமிழ்ப்பரிசளிப்பு, வெள்ளி விழாக் கொண்டாட்டம் எனச் சிறப்பாக நடைபெற்றன. செயல்திறன் தலைவர் இரா.அ. தங்கராசன் அவர்கள் தலைமையில் 25 ஆண்டுக்கால வரலாற்றுக் காட்சியும் இசைவிழாவும்நடந்தன. கழகத் தலைவர் கோ. கலைச்செல்வன் அவர்கள் தலைமையில் தமிழ்ப்பரிசளிப்பு நடந்தது. நாட்டியம், கோலாட்டம், கும்மியாட்டம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. வெள்ளி விழாக் குழுத்தலைவர் இரேணுகோபால் அவர்களும் பிற உறுப்பினரும் விழாவினைச் சிறப்பாக நடத்தினர்.

❖ **சுயமரியாதை இயக்க வரலாற்றுத் தொடர்சொற் பொழிவு நிறைவு விழா** 27-12-2003 இல் அரியாங்குப்பம் காமராசர் திருமணமண்டபத்தில் பெரியார் அறிவியல் மன்றத்தால் நடத்தப்பெற்றது. மன்றத் தலைவர் தூ. சடகோபன் தலைமை ஏற்றார். மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணித் தலைவர் செ. முத்து அவர்கள் முன்னிலையில் தொடர் சொற்பொழிவாற்றிய சங்கொலி ஆசிரியர் க. திருநாவுக்கரசு அவர்களைப் பாராட்டிப் பரிசு வழங்கினார். நடுவணரசு அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரனார்- சொற்பொழிவில் தலைமை ஏற்ற அறிஞர் பெருமக்கட்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. துணைச் செயலாளர் வந்தியத் தேவன் நிகழ்வுகளைத் தொகுத்தார். செயலாளர் செல்வராசு வரவேற்புரையும் பொருளாளர் இராமதாசு நன்றியுரையும் வழங்கினர்.

❖ தி.ஆ. 2035 தை 4 ஆம் நாள் (18-1-2004) திருநின்றவூர் திருவள்ளுவர் மன்றத்தின் சார்பில் திருவள்ளுவர் நாள் மற்றும் பொங்கல் திருவிழா, மழலைகளின் கவியரங்கம், பட்டிமன்றம், வினா விடை அரங்கம் எனச் சிறப்பாக நடைபெற்றன.

❖ புதுச்சேரி குறளாயத்தின் சார்பில் தி.ஆ. 2035 சுறவம் 2 ஆம் நாள் (16-1-2004) பொது நிலையத்துாய நன்னெறி கழகத்தில் திருவள்ளுவர் திருவிழா நடத்தப்பட்டது. திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தல், திருவள்ளுவர் படத்திறப்பு, கருத்தரங்கம், பாவரங்கம், சொற்போர்க்களம், ஆய்வரங்கம் என நிகழ்வுகள் சிறப்பாக நடந்தன விழாவில் புலவர் சா. செல்வ ரத்தினம்மாளின் நினைவுப்பரிசு மணிமேகலையில் பள்ளியிறுதித் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவி நா. பிரியாவிற்கு வழங்கப்பெற்றது. விழாவினைப் பாவலர் இளங்கோப்பாண்டியனாரும் புலவர் ஆறு. அரங்கண்ணலும் சிறப்பாக நடந்தது.

❖ முழுநிலாப் பாவரங்கம் : கவிதைப் பூங்கா, நண்பர்கள் தோட்டம் இணைந்து, முனைவர் அ. கனகராசு அவர்களின் இல்லத்தில், 7-01-04 அறிவன் மாலையில் 10 ஆவது முழுநிலாப் பாவரங்கத்தைச் சிறப்பாக நடத்தின. பாவலர்

www.padippakam.com



முனைவர் அ. கனகராசு வரவேற்றார். பாவலர் மா. இராமகிருட்டிணபாரதி முன்னிலை ஏற்றார். முனைவர் க. பஞ்சாங்கம் தொடக்கவுரையாற்றினார். புலவர் மு. இறைவிழியன் அவர்கள் தலைமையில் 'உழவு' என்ற பாடு பொருளில் 30 பெயருக்கு மேற்பட்ட பாவலர்கள் மரபு பாடல்களாலும் உரை வீச்சுக்களாலும் உணர்வைத் தூண்டுமாறு தமிழன்பர்களின் உள்ளங்களில் உழவை நடத்தினர். பாவலர் புதுவை யுகபாரதி நன்றியுரைத்தார். முழுநிலாப் பாவரங்கம் தொடர்ந்து நடைபெற்றிட நற்றமிழ் வாழ்த்துகிறது.

❖ **நாகலாபுரத்தில் பொங்கல் விழா - 11ஆம் ஆண்டுவிழா** நாகலாபுரம், திருவள்ளுவர் மன்றத்தின் சார்பில் 11ஆம் ஆண்டுவிழாவும் தை விழாவும் (15, 16-1-2004) இரு நாட்களில் மொழிஞாயிறு பாவாணர் திடலில் சிறப்பாக நடைபெற்றன. முதல் நாள் **திருக்குறள் ஒப்பித்தல் போட்டியும், கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்ட பட்டிமன்றமும்** நடந்தன. இரண்டாம் நாளில், **இலக்கிய விருந்து** ஆசிரியர் மு. பொன்னையா அவர்கள் தலைமையில், செஞ்சொற் கதிரவன் ப. அருளியாரால் வழங்கப்பட்டது. தலைவர் ச. சிவசங்கர், செயலாளர் ந. இளங்குமரன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். திரு. மு. செந்தில் குமார் நன்றியுரைத்தார்.

❖ **பெங்களூர்த் தமிழ்ச்சங்கம்** தைத் திங்களில் 16-1-04 முதல் 20-1-04 வரையில் **தமிழர் பண்பாட்டுத் திருவிழாவைச்** சிறப்பாகக் கொண்டாடியது. **தொடக்கவிழா, நினைவாற்றல் கலை நிகழ்ச்சி, படத்திறப்பு, கொடை விழா, குட்டிப்பட்டி மண்டபம், கலைநிகழ்ச்சி, பாட்டரங்கம், காமராசன் உயர்நிலைப் பள்ளி ஆண்டுவிழா, பண்பாட்டு நிறைவு விழா** என நிகழ்ச்சிகள் சுவையாக நடைபெற்றன. அறிஞர் பலரும் நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றனர்.

❖ **47 நாட்கள் நடைப்பயனம் : தமிழைச் செம்மொழியாக்கவும் 2004 ஆம் ஆண்டை தமிழாண்டாக அறிவிக்கக் கோியும்** நடுவணரசை வலியுறுத்தத் தஞ்சாவூர் மாவட்டத் தமிழ்ச் செம்மொழி அறப்போராட்டக் குழுவினர் கன்னியா குமரியிலிருந்து சென்னை வரையில் 47 நாட்கள் (23-11-2003 முதல் 08-01-2003 வரை) நடைப்பயணம் உடையார்பாளையம் குணா தலைமையில் பதினிருவர் மேற்கொண்டனர். அக்குழுவினர் புதுவை மாநிலத்திற்கு வந்த பொழுது தவளக்குப்பத்தில் **இளங்கோ இளைஞர் நற்பணி மன்றத்தின்** சார்பிலும் அரியாங்குப்பத்தில் **அரியாங்குப்பம் தமிழ் இளைஞர் நற்பணி மன்றத்தின்** சார்பிலும் முதலியார்பேட்டையில் **திருவள்ளுவர் மன்றத்தின்** சார்பிலும் வரவேற்கப்பட்டனர், தவளக்குப்பத்தில் தலைமையாசிரியர் சி. நாகலிங்கம் பகலுணவு வழங்கினார், மாலையில் புதுச்சேரியில் **பாரீசு தமிழர் இல்லத்தில்** அக்குழுவினர்க்குச் சிறந்த பாராட்டு விழா **தமிழர் நலக்காப்பணியால்** நடத்தப்பட்டது. தலைவர் பேராசிரியர் மா. இலெ. தங்கப்பா தலைமை தாங்கினார். முனைவர் இரா. திருமுருகனார் உள்ளிட்ட தமிழறிஞர் பலர் குழுவினரை வாழ்த்தினர். பாரீசு இல்ல உரிமையாளர் மு. கருணாநிதி சார்பிலும் **தமிழர் நலக் காப்பணியின்** சார்பிலும் தனித்தனியாக வழிச் செலவிற்காக உரு 500/- வழங்கப்பட்டன. உடையார்பாளையம் குணாவும் வழிகாட்டுநர் நாகூர் தி. சோமசுந்தரத்தேவரும் நன்றிவுரைத்தனர். குழுவினருக்குத் தேநீரும் மாச்சில்லும் தலைமையாசிரியர் வரத. ஆனந்தன் அவர்களாலும் இரவுணவு கவிஞர் தே. சனார்த்தனன் அவர்களாலும் காலைச் சிற்றுண்டி பேரா. ம. இலெ. தங்கப்பா, மு. இறைவிழியன் ஆகிய இருவராலும் அளிக்கப்பட்டன. குழுவினர் மறுநாள் புதுவை மாநில முதல்வரிடம் வாழ்த்துப் பெற்றுத் தம் பயணத்தைத் தொடர்ந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

AIR MAIL

நற்றமிழ்-திங்களிதழ்
NATRAMIZH-MONTHLY

பதிவு எண். புது.த.தி./2000/4265
Registration No. PONTAM / 2000 / 4265

அஞ்சல் உரிமம் : த.நா / அ.து.த 128 / 03-05. திங்கள் தோறும்
15 / 16ஆம் நாளில் நெல்லித்தோப்பு அஞ்சலகத்தில் சேர்க்கப்படுகிறது.
Postal registration : TN/PMG (CCR) 128/03-05. Posted
at NELLITHOPE POST OFFICE On 15th / 16th of Every Month.

| அச்சிட்ட நூல் அஞ்சல் - Printed Book Post |
|---|
| LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP ...RY / 83 / 03-05 |

N. Muraly
Dysse garden - 24, T.V.
7500 Holstebro
DANMARK.







PONDICHERRY

## தவத்திரு அழகரடிகள் நூற்றாண்டு விழா - மார்ச்சு 2004

மூன்று நாட்கள் நடைபெறும் அடிகளாரின் குருபூசை விழா, திருக்குறள் விழா உள்ளிட்ட நூற்றாண்டு விழா சிறப்புறநடைபெறஉள்ளது. அருளுள்ளம் கொண்ட ஆன்றோரும் சான்றோரும் தாளாரமாகப் பொருளுதவி புரிந்து விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம். காசோலையை **"அழகரடிகள் நூற்றாண்டு"** விழா என்னும் பெயரில் அனுப்புக.

இங்ஙனம்

**அழகரடிகள் நூற்றாண்டு விழாக்குழுவினர்**
குருகுலம், மதுராந்தகம், காஞ்சிபுரம் (மா) 603 306.
தொலைப்பேசி : 04115 - 252315

## நற்றமிழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ்க் கட்டணம் | — உரு | 5.00 |
| ஆண்டுக் கட்டணம் | — உரு | 60.00 |
| வெளிநாட்டு ஆண்டுக் கட்டணம் | — உரு | 300.00 |
| வாழ் நாள் கட்டணம் | — உரு | 500.00 |

திரு. ந. இளம்பூரணன் அவர்கட்கு உரிமையான 17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம், புதுச்சேரி - 605 013. இல் உள்ள அகத்தியர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, நற்றமிழ் உரிமையாளரும் ஆசிரியருமான புலவர் மு. இறைவிழியனாரால் 43, அங்காடித் தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605 005. என்கிற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது. தொலைபேசி : (0413) 2203765

Printed by **N. Elampuranan,** Owner of the press and published by **M. Iraivizhiyan** on behalf of **M. Iraivizhiyan** and printed at AHATHYAR PRESS, 17, First Street, Rajayer Thottam, Pondicherry - 605 013. and published at 43, Market Street, Nellithope, Pondicherry - 605 005. Editor **M. Iraivizhiyan,** Telephone : (0413) 2203765

படிப்பகம்